# சித்திர ராமாயணம்

### பி. ஸ்ரீ.

## 101. ‘திருமணம் நாளைக்கு’

### கண்களின் காதல் - பேச்சு

நான் கண்டு காதலித்த அழகன்தான் வில்லை முறித்திருக்க வேண்டும் என்று, நீலமாலை வந்து சொன்னதிலிருந்தே, தெரிந்து கொண்ட சீதைக்குக் கொஞ்சம் சந்தேகமும் இடையிடையே தோன்றாமல் இல்லை. கடைசியாக, இப்போது அந்தச் சந்தேகத்தை எப்படித் தெளிந்து கொள்கிறாள்?

அச் சபையில் ராமனை நிமிர்ந்து நேராகப் பார்ப்பதற்கோ நாணம். ஆகவே, இந்தத் தந்திரம் :

கைவளை திருத்துபு
  கடைக்கணின் உணர்ந்தாள் !

[ திருத்துபு – திருத்தத் தொடங்கி; ஒழுங்குபடுத்தத் தொடங்கி. ]

கை வளையல்களை ஒழுங்கு படுத்துகிறது என்ற வியாஜத்தால் ராமனைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொள்கிறாள். ஆம், அந்தக் கண்கள் மறுபடியும் சந்திக்கின்றன. அந்தக் காதல் – பேச்சையும், அதனால் சீதை அடைந்த நிலையையும் வர்ணிக்கும் கவி :

கருங்கடை நெடுங்கண் ஒளி –
  ஆறு, நிறை கண்ணைப்
பெருங்கடலில் மண்ட, உயிர்
  பெற்(று) இனி(து) உயிர்க்கும்
அருங்கலன் அணங்கரசி,
  ஆரமிழ்(து) அனைத்தும்
ஒருங்குடன் அருந்தினரை
  ஒத்(து) உடல் தடித்தாள்.

[ கண்ணப் பெருங் கடல் - கண்ணாகிய அழகுப் பெருங் கடல். மண்ட - நெருங்கிப் பாய. உயிர்க்கும் - மூச்சு விடுகிற. அருங்கலன் - அருமையான ஆபரணங்கள். அணங்கரசி - பெண்ணரசி. ஆரமிழ்து - அருமையான அமிர்தம். அருந்தினரை - உண்டவர்களை. ]

சீதையின் கடைக் கண்ணிலிருந்து பெருகிய ஒளியாறு ராமனது கண்ணாகிய அழகுப் பெருங் கடலில் மண்டிப் பாய்கிறதாம். அதனால் சீதை புத்துயிர் பெறுகிறாள்.

எவ்வளவு ஆத்திரத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டே பார்த்தாள்! இப்போது 'அதே காதலன் தான்' என்று கண்டதும், மூச்சும் நேராகி விட்டது. உடம்பும் நேராகி விட்டது — என்றால் போதுமா? பல கோடி தேவர்கள் பங்கிட்டு உண்ட அமிர்தத்தை யெல்லாம் வேறு எவரோடும் பகிர்ந்து கொள்ளாமல் தானே உண்டாற் போல உடம்பு பூரிக்கப் பெறுகிறாளாம். 'உடல் தடித்தாள்!' என்று கவிஞன் துணிந்து காட்டுவதைப் பாருங்கள்.

## காரியப் பேச்சு

காதலர்களுக் கிடையே நிகழும் இவ்வளவு ரஸமான நிகழ்ச்சியைக் கவிஞன் இப்படி யெல்லாம் வர்ணித்துக் கொண்டு வருகிறான், நிச்சய தாம்பூலம் என்ற அந்தச் சடங்கையே மறந்து விட்டது போல. ஆனால், இந்தக் கண்கள் வழங்கிக் கொண்ட நிச்சய தாம்பூலத்திற்கும் மேலான ஒரு சடங்கும் இருக்க முடியுமா? இனிக் காரியப் பேச்சுடன் இந்தக் கட்டத்தையே முடித்து விடுகிறான் கவிஞன்.

தசரத சக்ரவர்த்தி விச்வாமித்திரரைப் பார்த்து, "விவாகம் எப்போது நடைபெற வேண்டும்?" என்று வினவுகிறான். ராமனுடைய மணம் என்று சொல்லவில்லை, சீதாராமர் மணம் என்று கூடச் சொல்லவில்லை, ஸீதா கல்யாணம் என்றே குறிப்பிடுகிறான். வில் முறித்து நடைபெறும் இத் திருமணம் முன்பு 'மகன் வெற்றி'யாகத் தோன்றியது; இப்போதோ 'எல்லாம் மருமகளின் வெற்றி'யாகவே காண்கிறது!



'வல்லிபொரு சிற்றிடை
மடந்தைமண நாளாம்
எல்லையில் நலத்தபகல்
என்(று)உரைசெய்'
கென்றான்.

[வல்லி - பூங்கொடி. பொரு- ஒத்த. சிற்றிடை - மெல்லிய இடை. மடந்தை - (இங்கே) சீதை. எல்லையில் நலத்த பகல்-எல்லையில்லாத நலங்களோடு கூடிய முகூர்த்த தினம். என்று-எந்தத்தினம். உரை செய்க - சொல்லி அருளுக.]

'திருமணம் நாளைக்கே தான்!' என்று மறுமொழி சொல்லுகிறான் முனிவன். அந்த மறுமொழி

யைத்தான் எவ்வளவு சவுக்கமாக, தமாஷாகச் சொல்கிறான்?

‘‘வாளைஉக ளக், கயல்கள்
வாவும்அதின், மேதி
மூளைமுது கைக்கிழிய,
மூரியவ ரால்மீன்
பாளைவிரி யக்குதிகொள்
பண்ணைவள நாடா!
நாளையென உற்றபகல்’’
நற்றவன் உரைத்தான்.

[வாளை - வாளை மீன். உகள - துள்ளிக் குதிக்க. கயல் - கயல் மீன். வாவும் - தாவும். அதின் - அதனாலும். மேதி - எருமை. மூரிய - வலி பொருந்திய. பாளை - கமுகு, தெங்கு முதலியவற்றின் பாளைகள். பண்ணை - கழனிகள். உற்ற - பொருந்திய. நற்றவன் - நல்ல தவம் செய்த முனிவன்.]

வாளை என்ற பெரிய மீன்களும் சிறிய கயல் மீன்களும், தண்ணீரில் கிடக்கும் எருமைகளின் தலையிலும் முதுகிலும் துள்ளிக் குதிக்கின்றனவாம், தாவிப் பாய்கின்றனவாம். ‘எருமையின் மூளையும் முதுகும் கிழிந்து போகுமோ?’ என்று சொல்லும்படி அந்த மீன்கள் அவ்வளவு தடபுடலாகக் குதித்துப் பாய்ந்த போதிலும், எருமை மாடு அசைந்து கொடுப்பதாகவே தெரியவில்லை! அதே சமயம் வலிமையுள்ள வரால் மீன்கள் வெள்ளத்திலிருந்து அருகேயுள்ள கமுகு, தெங்கு முதலிய மரங்களின் பாளைகளைத் தாக்கிக் குதிக்கின்றனவாம். அந்த மோதுதலினால், பாளைகள் விரிகின்றனவாம். இவ்வளவு கதையையும் என் சொல்கிறான் விச்வாமித்திரன்?



"இவ்வளவு மிகுந்த நீர்வள நிலவளங்களையுடைய அரசனே!" என்று தசரதனை அழைத்து, "நாளைக்கே தான் கல்யாணம்!" என்று மிகவும் சுருங்கச் சொல்லி விடுகிறான்.

## பிரிகிறார், மறைகிறார்

இந்த உத்ஸாகப் பேச்சுக்குப் பின், தசரதன் 'சரி' யென்று தன் விடுதிக்குப் புறப்படுகிறான். ஜயசங்கம் முழங்குகிறது. சிற்றரசர்கள் எல்லோரும் எழுந்து நின்று கைகூப்பி வழிபட்டு வழிவிடுகிறார்கள்.

சீதை ராமனை விட்டுப் பிரிய மனமில்லாமல், நின்று நின்று தயங்கிச் செல்கிறாள். அப்படியேதான் ராமனும் அம் மண்டபத்தை விட்டு நீங்கித் தன் இருப்பிடத்துக்குப் போகிறான். அரசர்கள், முனிவர்கள் எல்லோரும் தனித் தனி பிரிந்து அவரவர் இருப்பிடம் போகிறார்கள்.

அப்போது சூரியாஸ்தமன சமயம்:

அன்னம்அரி திற்பிரிய,
அண்ணலும் அகன்(று)அப்
பொன்னின்நெடு மாடவரை
புக்கனன், மணிப்பூண்
மன்னவர் பிரிந்தனர்கள்,
மாதவர்கள் போனார்,
மின்னுசுடர் ஆதவனும்
மேருவில் மறைந்தான்.

[அன்னம் - சீதை. அரிதிற் பிரிய - அருமையாகப் பிரிய. மாடவரை - மாளிகையாகிற மலை. மணிப்பூண் - ரத்தினாபரணம். மாதவர் - முனிவர். ஆதவன் - சூரியன். மேரு - பொன்மயமான மலை.]

தசரதன், ராமன் முதலியோர் தம் தமக்கு உரிய இடத்தில் மறைந்து சென்றது போல், சூரியனும் தனக்கு உரியதொரு பொன்மயமான இடத்தில் மறைந்தான் என்று கவிஞனும் நம்மிடம் உத்ஸாகமாக உரையாட விரும்புவது போல், சூரியாஸ்தமனத்தையும் தமாஷாக வர்ணித்து முடிக்கிறான்.

கம்ப நாடக மேடையில் பொன் மயமான திரை விழுகிறது.

திரை விலகியதும், என்ன பார்க்கப் போகிறோம்? கல்யாண தடபுடல் தானே? அவ்வளவு ஆத்திரம் வேண்டாம்; பொறுத்துப் பாருங்கள்.

பி. ஸ்ரீ.

## 102. பொழுதும் விடிந்தது

காட்டு வழியிலே போய்க்கொண்டிருக்கிறவர்கள் தாகத்தால் வருந்துகிறார்கள். 'எங்கேயாவது கொஞ்சம் தண்ணீர் கிடைக்காதா?' என்ற ஆசையால் அலைந்து அவஸ்தைப்படுகையில் பக்கத்திலேயே ஒரு குளத்தைக் காண்கிறார்கள். என்ன அதிர்ஷ்டம்! ஆனால் — என்ன துரதிர்ஷ்டம்! — இறங்குவதற்குத்தான் வழி யில்லை. தண்ணீரைப் பார்த்தும் தாகசாந்தி கிடைக்க வில்லை. தளர்ச்சியும் கலக்கமும்தான் அதிகரிக்கின்றன.

### சீதை தவிப்பு

இத்தகைய யாத்திரிகரின் நிலையை அடைகிறாளாம் சீதை அன்றிரவு. பொழுது விடிந்தால் கல்யாணம்; ஆனால் அந்தப் பொழுது எப்பொழுது விடியுமோ ?

ஜனகன் செய்த உபசாரங்களால் விருந்தாளிகளெல்லாம் தேவ போகங்களை நுகர்ந்தவர்களைப் போலவும், உடம்போடு தேவலோகத்தை அடைந்தவர்களைப் போலவும் இருக்க, சீதையோ இப்படித் தன் காதல்-தாகத்தால் தவித்துக் கொண்டிருக்கிறாள். காதலனை மறுபடியும் காணப் பெற்றும் அவனை அப்போதே அடையப் பெறவில்லையே என்று தளர்ந்து கலங்குகிறாள், மயங்குகிறாள்.

"சூரியன் வரவே என்னை ஆட்கொள்ளும் தலைவனும் வருவான், என்னருகில் வருவான்" என்றுதான் தெரியுமே. ஆகவே,

'இரவே கொடியாய்!
விடியாய்' எனுமால்

[ எனும் - என்று சொல்வாள். ]

ஜில்லென்று தென்றல் வீசுகிறது. சீதையோ நடுங்கி, (குளிரால் அல்ல என்பதுதான் நமக்குத் தெரியுமே!)

தென்றல் - புலியே!
இரைதேடுதியோ ?

என்று அலறுகிறாள்.

## ராமன் தவிப்பு

ராமனுக்கும் அந்த இரவு ஏறக் குறைய இப்படித்தான் கழிந்தது.

மனனே ! எனை நீ
யும்,மறந் தனையோ ?

என்று பிரலாபிக்கிறான்.

ராமன் மனம் சீதையைத் தொடர்ந்து போய் விட்டதாம். 'நீ யார்? ஏன் வந்தாய் ?' என்று கூடச் சீதை அந்த மனத்தைப் பார்த்து யோக க்ஷேமம் விசாரிக்க வில்லையாம்.

வினவா தவர்பால்
விடைகொண் டிலேயோ ?

என்று மனத்தை நோக்கிக் கேட்கிறான் ராமன்.

'உன்னை வினவாத அவளிடம் நீயும் விடைபெற்றுக் கொள்ளாமலே திரும்பி விடுவது நியாயமாக இருக்க, விடைபெற்றுக் கொண்டும் வரவில்லையே ! அங்கேயே தங்கி விட்டாயே—அந்த மதியாதார் முற்றத்திலே !' என்று தவிக்கிறான். 'அவளோடு சென்ற நீயும் அவளிடமே அந்தக் கொடுமையையும் கற்றுக் கொண்டு என்னை மறந்தாயோ ?' என்கிறான்.

## மற்றவர்களும் உறங்கவில்லை

இப்படி, விடியாத இரவும் விடிந்தது. ஜனகனுக்கும் உறக்கமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நாளைத் திருமணம் என்று யானைமேல் முரசு அடிக்க வேண்டு மென்று கட்டளை யிடுகிறான். கல்யாண விஷயமாக வேறு காரியங்களிலும் ஈடுபட்டிருக்கிறான். நகரமாந்தரும் — ஆண்களும் பெண்களும், இளையரும் முதியரும்—கண்ணுறங்கவில்லை. அவ்வளவு





ஆத்திரம், உத்ஸாகம். நகரை அலங்கரிப்பதையே பொழுது போக்காகக் கொண்டு பொழுதைக் கழித்தார்கள்.

## சூரியனுக்கும் ஆத்திரம்தான்!

சீதா ராமர்களும் பிறரும், கரையில்லாத கருங்கடல் போலிருந்த அந்த இரவிற்கும் ஒரு கரை கண்டார்கள்! சூரியோதயம் ஆகிறது.

அஞ்சன ஒளியானும்
அலர்மிசை உறைவாளும்
எஞ்சலில் மணம்நாளைப்
புரிகுவர் எனவோடும்,
செஞ்சுடர் இருள்கிறித்
தினகரன் ஒருதேர்மேல்,
மஞ்சனை அணிகோலம்
காணிய எனவந்தான்.

[அஞ்சன ஒளியான் – அஞ்சன ஜோதி என்று சொல்லும்படி தோற்றமளித்த ராமன். அலர்மிசை உறைவாள் – தாமரைப் பூவில் வாழும் லக்ஷ்மியின் அம்சமான சீதாலக்ஷ்மி. எஞ்சலில் – குறைவில்லாத. தினகரன் - சூரியன். மஞ்சன் – மைந்தன், (இங்கே ராமன்). காணிய- பார்ப்பதற்கு.]

இரவு விடியச் சூரியன் உதயமாகும் இயற்கைத் தோற்றத்தை வர்ணிக்கும் இக் கவி, கம்பன் இயற்கையை வருணிக்கும் ஒரு சிறப்பியல்பை வெளியிடுகிறது எனலாம். கல்யாணத்திற்கு வருகிற ஓர் உறவினனாக அறிவிக்கிறான் உதய சூரியனையும் கவிஞன். ராமனுடைய குலமுதல்வனல்லவா? ஒரு தாத்தா தன் பேரப்பிள்ளையின் மாப்பிள்ளைக் கோலத்தைப் பார்க்க ஆசைப்பட்டு வருவது போலச் சூரியன் வருகிறானாம். தன் செஞ்சுடர்க் கரங்களால் இருளாகிய திரையைக் கிழித்துக் கொண்டு — ஆம், அவ்வளவு ஆத்திரம்! ஒரு பொன்மயமான தேரின் மேல் ஜம்மென்று வருகிறானாம்.

## ஆத்திரமும் அலங்காரமும்

நகரத்தைத் தொடர்ந்து அலங்கரிக்கிறார்கள் நகர மாந்தர்கள், வீடுகளில் தோரணம் கட்டுகிறார்கள். தூண்களைப் பட்டு - உறைகளால் அலங்கரிக்கிறார்கள். உப்பரிகைகளையும் அலங்கரிக்கிறார்கள். தங்களையும் அலங்கரித்துக் கொள்கிறார்கள். சிலர் சந்தனக் குழம்பையும் பூக்களையும் வீதிகளிலெல்லாம் சிந்திக்கொண்டு திரிகிறார்கள். சிலர் மதில்களின் மேல் கொடிகளைப் பறக்கவிடுகிறார்கள். சிலர் வீடுகளில் பூமாலைகளைத் தொங்க விடுகிறார்கள். பூமாலை புனைந்தும், பரிமள தைல சந்தன களபங்கள் பூசியும், அணியணிந்தும் அழகிய உடை உடுத்தும் தங்களை

அலங்காரம் செய்து கொள்கிறார்கள். தேர், யானை, குதிரைகளையும் அலங்கரிக்கிறார்கள். சிலர் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். சிலர் கண்ணாடிக்கு முன் திலகமிட்டுக் கொண்டு அழகு பார்த்துக் கொள்கிறார்கள்.

மேலும் மேலும் நெருங்கி வந்த வண்ணமா யிருக்கிறார்கள்.

தேர்மிசை வருவாரும்,
சிவிகையில் வருவாரும்,
ஊர்தியில் வருவாரும்
ஒளிமணி நிரையோடைக்
கார்மிசை வருவாரும்,
கரிணியில் வருவாரும்,
பார்மிசை வருவாரும்,
பண்டியில் வருவாரும் —

[ சிவிகை - பல்லக்கு. ஊர்தி - வாகனங்கள். மணி - ரத்தினம். நிரை - கூட்டம். ஓடைக் கார் - நெற்றிப் பட்டம் தரித்த மேகம்போன்ற யானை. கரிணி - பெண் யானை. பண்டி - வண்டி. ]

— அவசர அவசரமாக வந்து கூடுகிறார்கள்.

அந்தக் கல்யாண நாள் தேவேந்திரன் பட்டாபிஷேக தினம்போலிருக்கிறதாம். நகரமே இப்படி விளங்கினால், கல்யாண மண்டபத்தின் அலங்கரிப்பைச் சொல்லவா வேண்டும்?

## கல்யாண மண்டபம்

சந்திர வட்டக் குடை நிழலில் தசரத சக்ரவர்த்தி, முரசுகளும் சங்குகளும் வேதங்களும் ஒருங்கே முழங்க, பரிவாரங்களுடனும் சிற்றரசர்களுடனும் மண்டபத்தை யடைந்து,

பூணாணி ஆசனம்
பொலியத் தோன்றினன்.

ராமன் மணக்கோலம் பூண்டு அங்கே வருகிறான். அவன் வரும் கோலத்தைக் கண்ட பெண்மணிகளின் மகிழ்ச்சியை என்னென்பது?

சொரிந்தனர் மலர்மழை,
சுண்ணம் தூவினர்,
விரிந்தொளிர் காசுபொன்
தூசு வீசினர்.
பரிந்தனர், அழகினைப்
பருகினர்கொலாம்;
தெரிந்திலம் திருநகர்
மகளிர் செய்கையே!

[ சுண்ணம் — வாசனைப்பொடி. காசு — ரத்தினம். தூசு — ஆடை. பரிந்தனர் — விரும்பினவர்களாகி. பருகினர் கொலாம் - பருகினார்கள் போலும். தெரிந்திலம் - தெரிந்தோமில்லை. ]

பரதன் தேர் செலுத்த, லக்ஷ்மணனும் சத்ருக்னனும் சாமரை யிரட்ட ராமன் வரும்போது, பெண்கள் எல்லாம் பூமழை பொழிந்தும், வாசனைப் பொடிகளைத் தூவியும், துணிமணிகளை வீசி எறிந்தும், தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். ஏன் இந்த வெறி? 'அந்த அழகைப் பருகி வெறிகொண்டார்கள் போலும்!' இதையன்றி வேறு காரணத்தை அறிந்தோமில்லை என்று நிகைக்கிறான் கவிஞனும். இவனும் அந்த அழகைப் பருகி வெறி கொண்டவன் தானே!

# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 103. சீதா கல்யாணம்

### சீதை வருகிறாள்

ராமன் தேரிலிருந்து இறங்கி மண்டபத்தை அடைந்து வசிஷ்ட விச்வாமித்திர முனிவர்களையும் தந்தையையும் அடிவணங்கி, தந்தையின் பக்கத்திலிருந்த ஆசனத்தில் அமர்ந்தான். அதே சமயத்தில் சீதையும் மண மண்டபத்திற்கு வருகிறாள் :

அலைகடல் பிறந்து, பின்னை
அவனியில் தோன்றி, மீள
மலையிடை உதிக்கின்றாள்போல்
மண்டபம் அதனில் வந்தாள்.

[ அவனி - பூமி. ]

கல்யாண மண்டபத்தின் கிழக்கு வாசலை நோக்கிச் சீதை தேரிலே வருகிறாள். கிழக்கு முகமாக வீற்றிருக்கும் ராமன் அந்த வருகையையும் அழகையும் அப்படியே பார்க்கிறான். கீழ்த்திசையிலே இளஞ்சூரியன் உதயமாவது போல், சீதையாகிய பெண் - ஜோதி தோன்றுவதாகக் கற்பனை.

சூரியன் முதலில் கடலிலே உதித்துப் பின்பு அக்கடலுக்கு அடுத்த நிலப்பரப்பில் விளங்கி, அதன் பின் அப்பாலுள்ள மலை மேலும் பிரகாசிக்கக் கூடுமல்லவா? அப்படியே சீதை என்ற ஜோதியும் முதலில் கடலிலே லக்ஷ்மியாகப் பிறந்தாளாம். பின்பு பூமியிலே சீதா லக்ஷ்மியாகத் தோன்றினாளாம். அதன் பின், மலை போன்ற இந்த மண்டபத்திலே உதயம் செய்கிறாளாம் மணமகளாக.

என்ன கற்பனை! இப் பாட்டின் இசை ஓர் ஆனந்தக் கடல் போலவும், இனிய கருத்தும் கற்பனையும் அந்தக் கடலின் அலைகள் போலவும் வருகின்றன.

### தேவர்களும் வருகிறார்கள்

மகாலக்ஷ்மியாகச் சீதை பாற்கடலில் தோன்றிய காலத்திலே மகா விஷ்ணுவாக இருந்த ராமன் அந்தத் திருமகளை மணஞ்செய்து கொண்



டானும். அன்றைத் திருக் கல்யாணத்திலும் இன்றைத் திருக் கல்யாணம் விசேஷ அழகுடையதென்று இரண்டு திருமணங்களையும் காணப்பெற்ற தேவர்கள் ஒருமுகமாய் அபிப்பிராயப் படுகிறார்களாம்.

கல்யாணச் சிறப்பிலும் விசேஷமாய் மணமக்களான சீதாராமர்களின் அழகுச் சிறப்பைக் காணவே வந்தார்களாம். இந்தத் தம்பதிகளின் சேர்த்தி யழகைக் காணத் தாங்களும் தம்பதிகளாக வந்தார்களாம்.

அன்றினும்
இன்றுடைத்(து)
அழகென்
றாரரோ!

[உடைத்து-
உடையது.]

இத்தகைய கல்யாணச் சிறப்பைக் காணத் தேவேந்திரன் முதலிய தேவர்கள் தங்கள் தேவிமாரோடு வருகிறார்கள்.

இந்திரன் சசியொடும்
எய்தினான்; இளஞ்
சந்திர மௌலியும்
தையலாளுடன்
வந்தனன்; மலரயன்
வாக்கினாளுடன்

அந்தரம் புகுந்தனன்,
அழகு காணவே.

[ சசி - இந்திராணி இளஞ் சந்திர மௌலி - பிறைசூடிய சிவபெருமான். தையலாள் - உமாதேவி. மலரயன் - தாமரையிலுள்ள பிரமன். வாக்கினள் - சரஸ்வதி. அந்தரம் - வானவீதி. ]

## போகமும் யோகமும் போல

வசிஷ்டர் திருமணச் சடங்கிற்கு ஆயத்தம் செய்கிறார்; சீதையும் ராமனும் மண வேதிகளில் வீற்றிருக்கிறார்கள் :

மன்ற லின்வந்து
மணித்தவி(சு) ஏறி,
வென்றிநெ டுந்தகை
வீரனும், ஆர்வத்(து)
இன்துணை அன்னமும்
எய்தியி ருந்தார்,
ஒன்றிய போகமும்
யோகமும் ஒத்தார்!

[ மன்றல் - கலியாணம். மணித் தவிசு - ரத்தின மயமான ஆசனம். வென்றி - வெற்றி. நெடுந்தகை வீரன் - பெருங் குணமுடைய ராமன். ஆர்வம் - அன்பின் மிகுதி. இன்துணை அன்னம் - இனிய துணையாகிய சீதை. ஒன்றிய - ஒன்றுபட்ட. ]

சீதா ராமர்கள் போகமும் யோகமும் ஒன்றுபடுவது போல ஒன்றி வீற்றிருக்கிறார்கள். அதாவது, உலக இன்பமும் பரலோக இன்பமும் ஒருங்கே அமர்ந்திருப்பது போலக் காணப்படுகிறார்களாம். உலக இன்பமும் பரலோக இன்பமும் முற்றும் முரண்பட்டன என்பது சாதாரண அபிப்பிராயம். கம்பனைப் போன்ற மகா கவிகளோ உலக வாழ்வையும் பேரின்பமாக அனுபவிக்கும் அதீத சௌந்தர்ய உணர்ச்சி பெற்றவர்கள்; பரலோக இன்பத்தையும் இங்கே ஆகர்ஷித்துக் கொண்டு வந்து அனுபவிக்கக் கூடியவர்கள்.

## பூமியும் பொருளும் போல

ஜனகன், ராமன் எதிரே நின்று சீதையை ராமன் கையில் தாரை வார்த்துக் கொடுக்கிறான் :

கோமகன் முன்சன
கன்,குளிர் நன்னீர்,
'பூமகளும் பொரு
ளும்என நீஎன்
மாமகள் தன்னொடு
மன்னுதி' என்னாத்
தாமரை அன்ன
தடக்கையின் ஈந்தான்.

[ கோமகன் — சக்ரவர்த்தியின் மகனான ராமன். பூமகள் — வளத்துடனும் வனப்புடனும் விளங்கும் பூமி. மாமகள் - அழகிய மகள். மன்னுதி - நிலைபெற்று வாழ்க. என்னா — என்று சொல்லி. அன்ன - ஒத்த. தடக்கை — பெரிய கை. ]

"நீ என் மகளுடன் பூமியும் செல்வமும் போல் நிலை பெற்று வாழ்வாயாக!" என்று ஜனகன் குளிர்ந்த நல்ல ஜலத்தைத் தாரை வார்த்துக் கொடுத்தான். நில வளமும் வனப்பும், கைத்தொழில் வர்த்தகம் முதலான பொருளும் ஒருங்கே கலந்திருப்பதுதான் ஒரு நாட்டிற்குச் சிறப்பு என்பது கம்பன் கருத்து. 'அப்படியே நீங்களும் வாழ வேண்டும்' என்பது ஜனகன் வாழ்த்து.

### பாணிக்கிரகணம்

அந்தணர்கள் ஆசி கூறுகிறார்கள். பெண்கள் பல்லாண்டு பாடுகிறார்கள். அரசர்கள் 'போற்றி, போற்றி' யென்று வந்தனம் செலுத்துகிறார்கள். நாவலர்கள் வாழ்த்துகிறார்கள். சங்குகள் முழங்குகின்றன.

தேவர்கள் சொரிந்த பூமழையுடன், அரசர்கள் சொரிந்த பொன்மலர்களும், மற்றையோர் சொரியும் முத்துக்களும், வெண்மலர்களும் கலந்து கொண்டு, பூமியையும் நக்ஷத்திரங்களால் விளங்குகிற வானம் போலச் செய்து விடுகின்றன.

ராமன் ஹோமம் செய்து சீதையைப் பாணிக்கிரகணம் செய்கிறான்:

தையல் தளிர்க்கை,
தடக்கை பிடித்தான்.

[ தையல் – சீதை. ]

சீதையின் தளிர் போன்ற மெல்லிய கையை ராமன் தன் பெரிய கையால் பிடித்துக்கொண்டு தீ வலம் வருகிறான். பிறகு அம்மி மிதித்து அருந்ததி பார்க்கிறார்கள். பின்பு தம்பதிகள் முனி சிரேஷ்டர்களான வசிஷ்ட விச்வாமித்திரரை வணங்குகிறார்கள். அப்பால் தசரதனை வணங்கி அரண்மனைக்குள் பிரவேசிக்கிறார்கள்.

### கலைத்தேவிக்கும் கல்யாணம்

இத்தகைய சீதா கல்யாணத்திலே உலகம் முழுவதும் மங்கள ஓசைகளால் நிறைந்து விளங்குகிறதாம்.

ஆர்த்தன பேரிகை,
ஆர்த்தன சங்கம்;
ஆர்த்தன நான்மறை,
ஆர்த்தனர் வானோர்;
ஆர்த்தன பல்கலை;
ஆர்த்தன பல்லாண்(டு);
ஆர்த்தன வண்டினம்,
ஆர்த்தன அண்டம்!

அந்த மகிழ்ச்சியில் 'சிறிது, பெரிது' என்ற வேற்றுமையில்லாமல், எல்லாம் ஒன்றுபடுகின்றன. அற்ப வண்டுகளும் தங்கள் மகிழ்ச்சியை ரீங்கார பாஷையில் அறிவிக்க, அண்டங்களும் அந்தரத்திலே ஆனந்தக் கூத்தாடுகின்றனவாம். இத்தகைய ஆனந்த கோஷங்களில்,

ஆர்த்தன பல்கலை

என்று பலவேறு கலைகளின் ஆனந்த ஆரவாரத்தைக் கவிஞன் சிறப்பாகக் குறிப்பிடுகிறான். சீதா கல்யாணம் கலைகளுக்கும் வெற்றிதான். அந்தப் பங்குனி உத்தரத்தில் தானே கலைப் பெருஞ் செல்வமான கம்பராமாயணம் அரங்கேறியது! அந்த மங்கள முகூர்த்தத்தில் தானே கலைத் தேவியும் கம்பனுக்கு மாலை சூட்டி மகிழ்ந்தாள்!

# சித்ர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 104. மாங்கல்ய தாரணம்

பாணிக்கிரகணம் ஆகி விட்டது. சீதையின் கையைப் பிடித்துக் கொண்டு அரண்மனைக்குள் சென்ற ராமன், தாயார் மூவரையும் பணிந்து ஆசீர்வாதம் பெற்றான். அம் மூவரையும் ஒருங்கே கண்டதும் முதல் முதல் யாரைப் பணிந்தான், தெரியுமா? தன் தாயான கௌஸல்யா தேவியை அல்ல; முதலில் கைகேயி அடிகளில் தாழ்ந்து வணங்கினானாம். 'அன்போடு தாழ்ந்து வணங்கினான்' என்று சொல்ல வந்த கவிஞன், 'தாயினும் அன்பொடு தாழ்ந்து' வணங்கியதாகச் சொல்லுகிறான். பெற்ற தாயான கௌஸல்யா தேவியிடம் ராமன் வைத்திருந்த அன்பைக் காட்டிலும் அதிக அன்பைக் கைகேயியிடம் வைத்திருந்தான் என்று குறிப்பிடுகிறான். கைகேயியும் பரதனைக் காட்டிலும் ராமனை அதிக அன்புடன் நேசித்து வந்தாள். மேலும், தந்தையின் உள்ளத்துக்கு இந்த இளைய மனைவி மிகவும் உகந்தவள் அல்லவா?

### 'நன்மகனுக்கு'...நல்லணி


பாணிக்கிரகணம் முற்றுப்பெற்றதும் ராமன் கைகேயியை முந்தி வணங்கினான் என்று இங்கே — பால காண்டத்தின் இறுதியில் — குறிப்பிடுவது, அயோத்தியா காண்ட முகப்பிலே கைகேயியின் கொடுமையைத் தூக்கிக் காட்டுகிறது. அது மட்டுமில்லை; விதியின் கையிலே ஒரு பெருங் கருவியாக அமையப் போகிறாள் இவ்வுணர்ச்சி - நலம் வாய்ந்த பெண்மணி என்பதையும் சூசிப்பிக்கிறது.

கைகேயியை வணங்கிக் கௌஸல்யா தேவியையும் வணங்கிச் சுமித்திரையையும் தொழுகிறான் ராமன். சீதையும் அந்த முறைப்படியே மாமியாரை நமஸ்கரிக்கிறாள். அப்போது அவர்களுடைய மனநிலை என்ன? எப்படி ஆசீர்வதிக்கிறார்கள்?

கேகய மாமகள்
கேழ்கிளர் பாதம்
தாயினும் அன்பொடு
தாழ்ந்து வணங்கா,

ஆயதன் அன்னை
அடித்துணை சூடித்
தூய சுமித்திரை
தாள்தொழ
லோடும்,

[கேகய மாமகள் - கேகய மன்னனுடைய சிறந்த புதல்வியான கைகேயி. கேழ் கிளர்-ஒளி மிகுந்த. வணங்கா-வணங்கி. அடித்துணை-உபய திருவடிகள்.]



அன்னமும்
அன்னவர்
அம்பொன்
மலர்த்தாள்
சென்னி
புனைந்தனள்;
சிந்தை
உவந்தார்,
கன்னி
அருந்ததி
காரிகை
காணு,
"நன்மக னுக்(கு) இவள்
நல்அணி" என்றார்.

[அன்னம்-சீதை. அம்பொன்-அழகிய பொன். சென்னி-தலை. புனைந்தனள்-அணியாகக் கொண்டு வணங்கினள். உவந்தவர் — உவந்தவர்களாய். காணு-கண்டு. அருந்ததி காரிகை-அருந்ததி போன்ற பெண்.]

ராமன், தான் வில்லை முறிக்கும் சமயத்திலும் சீதையைத் 'தேடரு மாமணி' (தேடிப் பெறுதற்கு அரிய சிறந்த ரத்தினம்) என்று நினைத்தான். இப்பொழுது ராமன் - தாய்மாரும் அந்த அபிப்பிராயத்தை அங்கீகரிப்பது போல், 'நன் மகனுக்கு இவள் நல் அணி' என்று மகிழ்ந்து போகிறார்கள். மருமகளைத் தழுவிக் கொண்டு,

கண்கள் களிப்ப,
மனங்கள் களிப்பார்.

## அழகுக்கடலும் கருணைக்கடலும்

சகல சாஸ்திர பண்டிதர்களான பெரியோர்களின் கட்டளைப்படி, ராமனும் சீதையும் ஒரு வெண்பட்டு மெத்தையில் அமர்ந்து 'ஸமாவேசனம்' (மனைவியுடன் இருத்தல்) என்ற சடங்கை நிறைவேற்றுகிறார்கள். அந்த அழகையும், சீதையின் அந்த மன நிலையையும் ஓர் இசைப் படமாகப் பிடித்துக் காட்டும் பாட்டு:

நூற்கடல் அன்னவர்
சொற்கடல் நோக்கி,
மாற்கடல் அன்ன
மனத்தவ ளோடும்
கார்க்கடல் போல்கரு
ணைக்கடல் பண்டைப்
பாற்கடல் அன்னதோர்
பாயல ணைந்தான்.

[ நூற்கடல் அன்னவர் - வித்யா ஸாகரமான பண்டிதர்கள். சொற்கடல் - கடல் போன்ற கருத்தை வெளியிடும் சொற்கள். மால் கடல் - ஆனந்த லஹரியாகிய கடல். கார்க்கடல் - நீலக் கருங்கடல். கருணைக் கடல் - ராமன். பண்டை — பழமையான. பாயல் — மெத்தை.]



அந்தப் பட்டு மெத்தையில் ராமன் பக்கத்திலே நெருங்கி உட்கார்ந்து கொண்ட சீதையின் உள்ளத்திலே ஆனந்த லஹரி ஒரு சமுத்திரம் போலப் பெருகி விடுகிறது. சீதை அன்புக் கடலாகவும் அழகுக் கடலாகவும் ஆனந்தக் கடலாகவும் வீற்றிருக்க, ராமன் நீலக் கடலும் கருணைக் கடலும் கலந்து வீற்றிருப்பது போல வீற்றிருக்கிறான். அவர்கள் வீற்றிருந்த அந்த வெண்ணிறப் பட்டு மெத்தை ராமன் திருமாலாகிப் பள்ளி கொண்டிருந்த பாற்கடலை நினைப்பூட்டுகிறதாம். வேத விதிப்படி ஹோமாக்கினியை வசிஷ்டன் வளர்க்கிறான் :

பங்குனி உத்தரம்
ஆன பகற்போ(து)
அங்கண் இருக்கினில்
ஆயிர நாமச்
சிங்கம் மணத்தொழில்
செய்த திறத்தால்
மங்கல அங்கி
வசிட்டன் வளர்த்தான்.

[ அங்கண் - அங்கு. இருக்கு - வேதவிதி (ரிக் வேதம்). ஆயிர நாமச் சிங்கம் - ஆயிரம் திருநாமங்களை உடைய திருமாலின் அம்சமான ராமன். திறத்தால் — முறைமைக்கு ஏற்றபடி. அங்கி - அக்னி.]

திருமணம் இனிது முற்றுப்பெற்றது. "சரி, இவ்வளவு முறையாக வைதிகச் சடங்குகளுடன் நடந்த திருமணத்திலே தாலி கட்டியதாகக் கம்பன் சொல்லவில்லையே" என்று வாதிப்பவர்கள் உண்டு. "வடநாட்டில் தாலிகட்டும் வழக்கம் இல்லை; வடநாட்டுக் கதையானதால் அந்த வழக்கத்தை அனுசரித்துப் பாடியிருக்கலாம்" என்று சிலர் சமாதானம் சொல்லுகிறார்கள். ஆனால், கம்பன்தான் ராம கதையைத் தமிழ்க் கதை ஆக்கி விடுகிறானே? பண்டைத் தமிழர் மரபை யொட்டி, சீதாதேவி கல்யாணத்தைக் காதல் மணமாக வர்ணிப்பவன் தாலிகட்டும் தமிழ் வழக்கத்தை மறந்திருக்க முடியுமா? கலியாண தடபுடலில் தாலி கட்ட மறந்த கதை போலத் தான் மறந்து விட்டானா?

அப்படியிருக்க முடியாது. அயோத்திமா நகரத்தைப் பூமி தேவியின் 'நிறை நெடு மங்கல நாணோ?' என்றும் சீதா லக்ஷ்மியைப் பெண்களுக்கெல்லாம் 'திருமங்கல நாண்' என்றும் வர்ணிக்கும் கவி மாங்கல்ய தாரணத்தை மறந்திருக்க முடியுமா?

மாங்கல்யச் சரடு அல்லது தாலி தான் மற்ற ஆபரணங்களை அணிந்து கொள்ளும் உரிமையை ஒரு பெண்ணுக்கு அளிக்கிறது என்பது தமிழர் கொள்கை. ஆனால், சீதையை நோக்கி, "நீ வீசி யெறிந்த மற்ற ஆபரணங்கள் தான் உனக்கு 'மாங்கல்யப் பிச்சை' அளித்தன, ராமனுயிரைக் காப்பாற்றி!" என்று எவ்வளவு துணிவாகச் சொல்கிறான் அனுமன்:

மற்றைநல் அணிகள்காண், உன்
மங்கலம் காத்த, மாதோ!

ஆதலால், மாங்கல்ய தாரணத்தைக் குறிக்கும் பாட்டு ஒருவேளை கால வெள்ளத்திலே மறைந்து போயிருக்கலாமோ? அல்லது, அது அவ்வளவு சர்வ சாதாரண நிகழ்ச்சி யென்று உய்த்துணரவிட் டிருக்கலாமோ?

# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 105. திருமணத்திற்குப் பின்

விச்வாமித்திர முனிவர் மணமக்களுக்கு ஆசி கூறிவிட்டு மறுபடியும் தாம் உகந்த மலையிலே தவஞ்செய்யப் போய் விட்டார். இனி நாம் இவரை ராமாயணத்தில் சந்திப்பதே யில்லை. மண வேள்வி வசிஷ்டரால் நடந்த போதிலும், உண்மையில் சித்தாச்ரமத்திலே தாம் இயற்றிய வேள்வியை வியாஜமாகக் கொண்டு விச்வாமித்திரரே திருமணத் தூதராகச் சென்று ராமனை அழைத்து வந்து மண வேள்வியை இனிது நிறைவேற்றி வைத்தார் என்று சொல்லவேண்டும். பின்வரும் 'பெரிய காரியங்'களை உத்தேசித்தே திருமணத்தைத் திருமணத் தூதர் முடித்து வைத்தார் என்றும் ஊகிக்க வேண்டும். அந்தப் பெரிய காரியங்களுக்காக விரிந்த உலகத்தை ஒருவாறு ராமனுக்குக் காட்டி வசிஷ்ட குருகுலத்தில் அவன் கற்ற கல்வியைப் பூர்த்தி செய்து, தர்ம விரோதிகளான அரக்கர்களையும் 'அறிமுகப் படுத்தி' வைக்கிறார். இந்தக் காரியம் முடிந்ததும் விசுவாமித்திரர் மறைந்து விடுகிறார்.

*　　　*　　　*　　　*

தசரதன் தம் மக்கள், மருமக்கள் முதலியவர்களுடன் அயோத்திக்குப் புறப்பட்டான். சக்ரவர்த்தி முன்னே செல்ல மிதிலை வாசிகள் மனம் பின்னே தொடர, தம்பிமார் அருகே வர, ராமன் சீதையுடன் இனிமையாக அயோத்தியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான்.

வழியிலே பரசுராமன் மின்னும் ஜடையோடும் வில்லோடும் தன் ஆயுதமான மழுவோடும், முகமும் கண்ணும் நெருப்பைக் கக்க, பயங்கரமாக வருகிறான். தன் தாய் தந்தையருக்குக் கேடு செய்த கார்த்தவீரியார்ச்சுனன் என்ற அரசனுடைய தோள்களை வெட்டித் தள்ளியும் கோபம் தணியாமல் பல வேறு க்ஷத்திரிய அரசர்களையும், வெறி கொண்டவனைப் போல் கொன்று தள்ளியவன், இப்போது ரௌத்ராகாரமாக வருவது கண்டு, தசரதன் தன் அருமைப் பிள்ளையாகிய ராமனுக்குக் கேடு விளையுமோ என்று பயப்படுகிறான்.

பரசுராமனோ இடிக் குரலில் அதட்டிக் கொண்டே ராமன் எதிரில் வருகிறான். சக்ரவர்த்தி ராமனுக்கும் பரசுராமனுக்கும் இடையே போய்த் தரையில் முடி படியப் பரசுராமன் காலில் விழுகிறான்.

'இவனும்என(து) உயிரும்உன(து)
அபயம்இனி' என்றான்.

'எனதுயிரும்' என்பதற்கு முன் 'இவனும்' என்று ராமனைக் குறிப்பிடுவதால், இவன் தன் உயிரினும் இனியவன் என்பதும், ராமன் இருந்தால் தான் தனக்கும் உயிர் இருக்கும் என்பதும் குறிப்பு. எனவே ராமனைக் காப்பாற்ற வேண்டுமென்றும், அவனைக் கண்டு இன்புற்றிருக்கவே தனக்கும் உயிர்ப்பிச்சை கொடுக்க வேண்டுமென்றும், ராமனும், தன்னுயிரும் பரசுராமனுடைய அடைக்கலப் பொருளாகு மென்றும் சொல்லி ஸ்தோத்திரம் செய்கிறான். ஆசையும் அபிமானமும் அதிகமாக அதிகமாக, தசரதனைப் போன்ற வீரனுக்கும் கூடப் பயமும் கவலையும் அதிகரிக்கின்றன.

பரசுராமன் அந்தச் சமாதான முயற்சியைச் சிறிதும் கவனிக்கவில்லை. காலில் விழுந்த வீர மன்னனை இகழ்ந்து ராமனை நோக்கிப் பெருஞ்சினத்தோடும், "நீ முறித்த சிவ தனுசு முன்னமே சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஏற்பட்ட போரில் முறிந்து போனது தான்!" என்ற பீடிகையோடும், தான் வந்த காரியத்தைச் சொல்லுகிறான். "அந்தப் போரில் வெற்றி பெற்ற வில் இதோ இருக்கிறது; இதுதான் விஷ்ணு வில். இதை நீ வளைக்க முடியுமானால் வளைத்துப் பார். உனக்கு வலியிருந்தால் உன்னுடன் போர் செய்யவும் சித்தமாயிருக்கிறேன்" என்கிறான்.

அப்படிப் பரசுராமன் சொன்னதும், என்ன நடக்கிறது? எவ்வளவு விரைவாக அந்தக் காரியம் நடக்கிறது,—பயமுறுத்துகிறவன் தானே பயந்து நடுங்கும்படி:

என்றனன்;
என்ன, நின்ற
இராமனும்
முறுவல்எய்தி
நன்றொளிர்
முகத்தனாகி,
'நாரணன்
வலியின் ஆண்ட
வென்றிவில்
தருக' என்னக்
கொடுத்தனன்;
வீரன் கொண்
டான்,
துன்றிருஞ்
சடையோன்
அஞ்சத்
தோளுற வாங்
கிச் சொல்லும்.

[முறுவல் - புன்சிரிப்பு. நன்று ஒளிர் முகத்தான் - நன்றாக ஒளி செய்யும் முகத்தை யுடையவன். வலி-வலிமை. வென்றி - வெற்றி. துன்று இருஞ்



சடையோன் - நெருங்கிய பெருஞ் சடைகளோடு கூடிய பரசுராமன். வாங்கி - வளைத்து. ]

“பூதலத் தரசை யெல்லாம்
பொன்றுவித் தனையென் றாலும்,
வேதவித் தாய மேலோன்
மைந்தன்நீ ; விரதம் பூண்டாய்!
ஆதலின் கொல்ல லாகா(து):
அம்பிது பிழைப்ப தன்றால்!
யாதிதற்(கு) இலக்க மாவ(து)?
இயம்புதி விரைவின்” என்றான்.

[ பொன்றுவித்தனை - அழியச் செய்தாய். வேத வித்து – வேதங்களை நன்கு கண்டு அறிந்தவன். ஆய–ஆகிய. பிழைப்பதன்று – தவறுவதன்று. இலக்கம்–குறிப்பொருள். இயம்புதி–சொல்வாய். ]

பரசுராமனுடைய கோப வார்த்தையைக் கேட்டதும், சீற்றத்தைப் பார்த்ததும், ராமன் அமைதியாகப் புன்சிரிப்புச் சிரிக்கிறான். அந்தப் புன்சிரிப்பு முகமண்டலத்தை நன்றாக ஒளிரச் செய்ய, “அந்த வில்லைத் தந்துவிடு” என்று மெல்லத் தன் கையில் வாங்கிக் கொள்கிறான்.

திடீரென்று பரசுராமனுக்கு என் இந்த நடுக்கம்? அவ்வளவு அநாயாசமாக ராமன் அந்த விஷ்ணு தனுசையும் வளைத்து விடுகிறான்.



ராமனது இள நகை இள நிலவு போலக் குளிர்ந்து வீசுகிறது. அந்த மாட்சியில் கூசி ஒடுங்குகின்றன நெருப்பைக் கக்கும் சொற்களும் கண்களும். அந்த இள நகையிலே தோய்ந்து அமைதி தழுவி வரும் அந்தச் சொற்கள் பரசுராமன் செவியில் கம்பீரமாக ஒலிக்கின்றன.

"பரசுராமா, நீ உலகத்திலுள்ள அரச குலத்தாரைக் கொன்ற கொலைஞன்; எனவே தண்டனைக்கு உரியவன். அப்படியிருந்தும் உன்னை நான் மன்னிக்கப் போகிறேன். இந்த மன்னிப்பு வேதவித்தான உன் தந்தை பொருட்டே யாகும். மேலும் தவ வேஷத்தோடு விரதம் பூண்டிருக்கிறாய்; இனி நீ நல்வழிப் படுவாய் என்று நம்புகிறேன். ஆகையால் உன்னை நான் கொல்லப் போவதில்லை. வில்லில் தொடுத்த அம்போ வீணாகப் போவதும் இல்லையே! இதற்கு இலக்கு யாது? விரைவாகச் சொல்லு!" என்று கேட்கிறான்.

'இயம்புதி விரைவின்' என்பது ராமனுடைய ஆத்திரமன்று, பயமுறுத்தலுமன்று; ராமபாணம் வெளிப்பட்டு அபாயத்தை உண்டாக்குவதற்கு முன்னே அவன் தப்பவேண்டும் என்ற அருளின் வேகந்தான்.

பிறப்பால் பிராம்மணனாகிய பரசுராமனை ராமன் 'வேத வித்தாய மேலோன்' (பார்ப்பனப் பெரியோன்) என்று ஒப்புக் கொள்ளாமல், 'வேதவித்தாகிய மேலோன் மைந்தன்' என்று கூறுவது கவனிக்கத் தக்கது. பதில் சொல்லும் பரசுராமன் ராமனை 'வேதியா!' என்று அழைப்பதும் சிந்திக்கத் தக்கது.

நீதியாய்! முனிந்திடேல்;
நீ இங்கு யாவர்க்கும்
ஆதியான்; அறிந்தனன்
அலங்கல் நேமியாய்!
வேதியா! இறுவதே
அன்றி வெண்மதிப்
பாதியான் பிடித்தவில்
பற்றப் போதுமோ?


[முனிந்திடேல் — கோபங் கொள்ளாதே. ஆதியான் — ஆதியான தலைவன். அலங்கல் — மாலை. நேமியாய் — சக்கரத்தைக் கொண்ட விஷ்ணுவின் அம்சமானவனே. இறுவது — முறிபடுவது. வெண்மதிப் பாதியான் - பிறை தரித்த பரமசிவன். பற்ற — பிடித்தற்கும்.]

என்று துதிக்கிறான் பரசுராமன்.

கர்வத்திற்குக் காரணமான தபோ பலம் ராமன் அம்புக்கு இலக்காகி அழிந்து போகிறது. பரசுராமன் தொழுது விடை பெற்றுக் கொள்கிறான். இப்போது தான் தசரதன்—மூர்ச்சித்தவனைப்போல் கிடந்தவன்— உணர்வு வெளிப்பட ராமனை ஆலிங்கனம் செய்து கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறான்.

* * * *

இவர்கள் அயோத்தி அடைந்து சில நாள் சென்ற பின் பரதன் தன் தாயார் பிறந்த நாடான கேகய நாட்டுக்குப் போகிறான். இவனும் தந்தையைப்போல் ராமனையன்றி உயிர் வேறு இல்லாதவன். ஆதலால், உயிரைப் பிரிந்து உடல் சென்றாற் போலச் செல்லுகிறான் — என்கிறான் கவிஞன். கைகேயியின் சதியாலோசனையை அறவே வெறுக்கப் போகும் பரதனுடைய குணநிசயத்திற்கு இங்கே வித்து இடப்படுகிறது.



# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 106. சபை கூடிற்று

திடீரென்று இடி இடிப்பது போல் சத்தம். பளிச்சென்று அயோத்தி வாசிகள் வீட்டு வாசலில் வந்து நிற்கிறார்கள். வானத்தைப் பார்க்கவில்லை, ஆவலாக வீதியைத்தான் நோக்குகிறார்கள். அரண்மனை முரசுகளின் இடி தான் என்று தெரியும். அப்படி இன்று என்ன விசேஷம்? ஏன் இத்தனை முரசுகள் ஏக காலத்தில் முழங்குகின்றன?

### பிரவேசம்

தூரத்திலே பெருங் கோபம் கொண்ட ஒரு ராக்ஷஸ மேகம் போல வருகிறது பெரிய யானை, கம்பீரமாக அடியிட்டு. விசேஷமாய் அலங்கரிக்கப் பட்டிருக்கிறது. முதுகின் முன் பக்கத்திலே அமைத்திருக்கும் அம்பாரி மேல் — யார் அவர்?

யானை வந்துகொண்டேயிருக்கிறது. அந்த ஆசனத்தின்மீது சந்திர வட்டக் குடை நிழலில் யார் அப்படி வீற்றிருக்கிறார்? இரண்டு பக்கங்களிலும் வீசும் வெண்சாமரைகளுக்கிடையே ஆண்டிலும் அனுபவத்திலும் பழுத்த முகத்தைக் கண் கொட்டாமல் பார்க்கிறார்கள் ஜனங்கள். ஏன் இந்த முகம் இத்தனை எண்ணங்களிலும் ஆலோசனைகளிலும் முழுகியிருக்கிறது? இவர் மந்திராலோசனை மண்டபத்திலே பிரவேசிக்கிறார்:

மண் ணுறு முரசினம்
மழையின் ஆர்ப்புறப்,
பண் ணுறு படர்சினப்
பரும யானையான்,
கண் ணுறு கவரியங்
கற்றை சுற்றுற
எண் ணுறு சூழ்ச்சியின்,
இருக்கை எய்தினன்.

[மண்ணுறு — ஒரு வகைச் சாந்து பூசிய. முரசினம்—முரசுகள். மழையின் — மேகங்கள் போல. ஆர்ப்புற — முழங்க. பண்ணுறு — அலங்கரிக்கப் பட்ட. படர்சினம் — மிக்க கோபம். பருமம் — அம்பாரி. கண்ணுறு — கண்

நிறைந்த. கவரி — சாமரை. கற்றை — திரள். சுற்றுற — சூழ்ந்து வர. எண்ணுறு — எண்ணங்கள் மிகுந்த. சூழ்ச்சி — ஆலோசனை. ]

மண்டபத்திலே சக்ரவர்த்தியைத் தரிசிக்கும் பொருட்டு உரவினரும் நண்பர்களும் சிற்றரசர்களும் வந்திருக்கிறார்கள். வழக்கமாய்ச் சக்ரவர்த்தி அவர்களோடு எவ்வளவோ பிரியமாக உரையாடுவதுண்டு. இன்று அதே பிரியமான குரலால் அவர்களை வெளியே போகச் சொல்கிறார். மந்திராலோசனை செய்யும்போது அவர்கள் இருப்பது சரியன்று என்பது எண்ணம்.

சிற்றரசர்கள் சக்ரவர்த்திக்குக் கப்பம் கட்டுகிறவர்களானபடியால் 'சரி சரி' என்று சொன்னதை யெல்லாம் ஒப்பக்கொள்ளக் கூடுமல்லவா? அவர்கள் அச்சத்தாலும், உறவினர்களும் நண்பர்களும் பிரியத்தினாலும் சக்ரவர்த்தியின் அபிப்பிராயத்தைப் பரிசீலனை செய்யாமல் அங்கீகரிக்கக் கூடும்.


அவர்கள் நீங்கியதும் சக்ரவர்த்தி சிறிது நேரம் தனித்திருந்து எண்ணமிடுகிறார். பிறகு மந்திராலோசனைக்குரிய மந்திரிமார்களை வருக என்று ஏவுகிறார்.

## நாலாவது மூர்த்தி

மந்திரிகளில் முக்கியரும் குலகுருவும் ஆகிய வசிஷ்ட முனிவர் முதன் முதல் பிரவேசிக்கிறார்:

பூவரு பொலங்கழல்
 பொருவில் மன்னவன்
காவலில் ஆணையங்
 கடவு ளாமெனத்
தேவரும் முனிவரும்
 உணரும் தேவர்கள்
மூவரும் நால்வராம்
 முனிவந்(து) எய்தினான்.

[ பூவரு - பூக்கள் சித்திரிக்கப் பட்டிருக்கும். பொலங்கழல் — அழகிய வீரக்கழல். பொருவில் - ஒப்பில்லாத. காவலின் - காவலிலே. ஆணையங் கடவுள் - ஆக்ஞா சக்ரத்தின் அதிதேவதை. ]



மாட்சிமை தங்கிய வீராதி வீரன், ராஜாதி ராஜன் என்றெல்லாம் சக்ரவர்த்திக்குக் கட்டியம் கூறுவது போல அமைந்திருக்கிறது,

பூவரு பொலங்கழல்
 பொருவில் மன்னவன்

என்ற செய்யுள் அடி. வீர சக்ரவர்த்தியின் ஆக்ஞா சக்ரத்துக்கு, ஞான வீரரும் சமாதானப் பிரியருமாகிய வசிஷ்டரே அதிதேவதை

யாவர். இப்படி வசிஷ்டர் தசரதன் மூலமாக நடத்தும் அரசின் பெருமையைச் சொல்லவா வேண்டும்?

அறிவிற் சிறந்த தேவர்களும் முனிவர்களும், மும்மைப் பெருந் தெய்வங்கள் என்று பிரம்மாவையும் விஷ்ணுவையும் சிவனையும் மதித்தார்கள். சிருஷ்டி-சக்திக்கும் ரட்சக சக்திக்கும் ஸம்ஹாரம் என்ற விடுதலைச் சக்திக்கும் விசேஷ மதிப்பைக் கொடுத்தவர்கள், வசிஷ்டருடைய அரசியல் - ஞானம் என்ற சக்தியையும் நான்காவது பெருந் தெய்வ சக்தியாக மதிக்க வேண்டுமாம்.

## மந்திரிகளின் குணாதிசயம்

இத்தகைய அரசியலில் வசிஷ்டருடன் ஒத்துழைக்கும் பாக்கியம் பெற்ற மற்ற மந்திரிகளும் பலவகைக் குணங்களும் தகுதியும் வாய்ந்தவர்கள் :

குலமுதல் தொன்மையும்,
கலையின் குப்பையும்,
பலமுதற் கேள்வியும்
பயனும் எய்தினர்,
நலம்முதல் நலியினும்
நடுவு நோக்குவார்,
சலம்முதல் அறுத்(து)அருந்
தருமம் தாங்கினர்.

[தொன்மை - பழமை. குப்பை - மிகுதி. முதல் - முதன்மையான. முதல் நலியினும் - வேரோடு அழிவதாயிருப்பினும். நடுவு - நடுநிலைமை. சலம் - கோபம். முதல் அறுத்து - வேரோடு களைந்து.]

அமைச்சர்கள் நல்ல பரம்பரையிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். பரம்பரை போதுமா? கலைகளை மிகுதியாகக் கற்றறிந்தவர்களைப் பொறுக்கி யெடுத்தார் சக்ரவர்த்தி. பல வேறு கலைகளுடன் கேள்விச் செல்வமும் பெற்ற உள்ளத்தைப் பண்படுத்திக் கொண்டவர்கள் அவர்கள். அத்தகைய கல்வி கேள்விகளின் பயனையும் அடைந்தவர்கள். வாழ்க்கைக்குப் பயன் தராத 'மலட்டு'க் கல்வியால் மந்திரிகளுக்கு என்னபயன்? சுயநலம் அடியோடு கெடுவதாயினும் நடுநிலை



மையிலேயே நிற்பார்கள். கோபத்தை வேரோடு அறுத்தவர்கள். ஆகவே தாங்குவதற்கு அரிய தருமத்தைத் தாங்கி நின்று அரசாங்கத்திற்குத் தூண்போல் உதவினார்கள்.

இத்தகைய மந்திரிகள் நன்மையும் தீமையும் ஆராய்ந்து நாண வைத்திய சிகிச்சை செய்வது போல் அரசனுடைய குற்றங் குறைகளைக் களைந்தார்கள். இவர்கள் தொகையில் அறுபதினாயிரர் என்கிறான் கவிஞன்.

தசரதருக்கு வயது அறுபதினாயிரம், மனைவியர் அறுபதினாயிரம், மந்திரிமார்களும் அறுபதினாயிரம். சிவதனுசை எடுத்து வந்தவர்களின் தொகையும் அறுபதினாயிரம், தசரத சைனியமும் அறுபதினாயிரம் அக்ஷௌஹிணி!

ஆனால் இப்படி வேடிக்கையாகத்தான் கவி மந்திரிகளின் தொகையைப் பெருக்கி விட்டான் என்று எண்ணவேண்டாம். இந்த மந்திரிகளின் பெருங் கூட்டத்தை ஒரு ஜனப் பிரதிநிதி சபையென்றே ஊகிக்கலாம்.

அறுபதினாயிரர்; எனினும் பொது நன்மையை நாடுவதில் இவர்களுக்கெல்லாம் அறிவு ஒன்றே என்னும்படி ஒத்துழைப்பார்கள்.

இம் மந்திரிகள் முறைப்படியே வந்து முதன் முதல் வசிஷ்டனைப் பணிந்து, பிறகு சக்ரவர்த்தியை அஞ்சலி செய்து, தத்தமக்குரிய ஆசனங்களில் அமர்ந்தார்கள். சக்ரவர்த்தி அவர்களை அருளோடு நோக்கிய பின் மந்திராலோசனை ஆரம்பமாகிறது.

## கை மேல் பலன்!

எஸ். ஆர். வி.

சங்கரய்யருக்கு சங்கீதப் பத்திரிகைகளைக் கண்டாலே பிடிக்காது. ஏனென்றால், அவைகள் ஒன்றிலாவது அவருடைய சங்கீதத்தைப் பற்றிப் புகழ்ந்து எழுதவில்லை. அவர் போய்ப் பார்த்த இரண்டொரு பத்திரிகைக் காரர்களும், "உங்கள் சங்கீதத்தை அபிவிருத்தி செய்து கொள்ளுங்கள் முதலில்! பிறகு பத்திரிகைக் காரர்கள் தாங்களாகவே எழுதுவார்கள்" என்று அவரை மட்டம் தட்டி அனுப்பி விட்டார்கள். அதிலிருந்து அவர் எந்தப் பத்திரிகையையும் கண்ணெடுத்தும் பார்ப்பது இல்லை.

இப்படியிருக்கையில், சரஸ்வதி சங்கீத சபையின் காரியதரிசி ஒரு நாள் அவரிடம் வந்து. "அடுத்த ஞாயிற்றுக் கிழமையன்று உங்கள் கச்சேரியைப் போடலாம் என்று தீர்மானித்திருக்கிறோம்" என்றார்.

"இப்பொழுது தான் உங்களுக்கு புத்தி வந்ததோ?" என்றார் சங்கரய்யர் ஆத்திரமாக.

"என்ன, அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"பின்னே என்ன ஐயா! பொழுது விடிந்தால் அந்த நடேச பாகவதருக்குத் தானே கச்சேரி கொடுக்கிறீர்கள்! அவருக்கு ஒழுங்காக ஒரு பாட்டுப் பாடத் தெரியுமா?"

"தெரியா விட்டால் எல்லாப் பத்திரிகைகளும் அவரை அவ்வளவு புகழ்ந்து எழுதுமா?"

"அட போம் ஐயா! பத்திரிகையில் வருவதை நம்புகிறீரே! நன்றாகப் பாடினால் 'மோசம்' என்பார்கள், மோசமாகப் பாடினால் 'பேஷ்' என்பார்கள்!"

"அப்படியா சமாசாரம்! நல்ல வேளை ஸார்! உண்மை தெரிந்ததே இந்த மட்டும்! நீங்கள் நன்றாகப் பாடுகிறீர்கள் என்று இன்றையப் பத்திரிகையில் வந்திருந்த ஒரு செய்தியைப் பார்த்து விட்டுத்தான் உங்கள் கச்சேரிக்கு ஏற்பாடு செய்ய வந்தேன்!......நீங்கள் தான் சொல்லி விட்டீர்களே, பத்திரிகையை நம்பப்படாதென்று!...நான் வரேன்!..."



# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 107. தசரதன் பேசுகிருன் — விதி சிரிக்கிறது !

மந்திரிகள் தத்தம் ஆசனங்களில் அமர்ந்த பின் சக்ரவர்த்தி அவர்களை முறையாக முகம் பார்த்து, "ஒரு பெரிய காரியத்தைக் குறித்து இப்போது ஆலோசனை செய்து கொண்டிருக்கிறேன். என் 'அறிவு நிலை'யாகிய அமைச்சர்களே! நான் சொல்லப் போவதை நன்ருகக் கேட்க வேண்டும்" என்று பேசத் தொடங்கினுன்.

### முன்னுரைப் பிரசங்கம்

"ஆறுபதினுயிரம் ஆண்டு நான் முறை தவருமல் ஆட்சி செலுத்தி வந்திருக்கிறேன். இந்த மகா ராஜ்யத்தை என் தோள்களில் தாங்கி வருகிறேன் என்ற பொறுப்புடன் ஆண்டு வந்தேன். ஆனுல் இந்த மாட்சி, மகா ராஜாவாகிய என்னுடைய மாட்சி அன்று; எல்லாம் மந்திரிகளாகிய உங்களுடைய மாட்சி தான்!" என்ற முன்னுரையே அமைச்சர்களை வசீகரித்து விடுகிறது :


வையம்என் புயத்திடை
உங்கள் மாட்சியால்
ஐயிரண்(டு) ஆயிரத்(து)
ஆறு தாங்கினேன்.

[ ஐயிரண்டு ஆயிரத்து ஆறு — 5 × 2000 × 6 = 60,000. ]

### நாட்டுக்கும் கற்பு

பிறகு, தமது ஆட்சிக்கு மந்திரிகள் பேருதவி புரிந்ததுடன் தருமமும் கை கொடுத்து உதவியது என்கிருன். அதனுல்தான் மன்னுயிர்க்கு நன்மையே புரிந்து கொண்டிருக்க இயன்றதாம்.

குடிகளுக்கு உண்மையாகவே இதம் செய்யவேண்டுமென்ருல் அந்த நாட்டின் சுதந்திரம் இனிது காக்கப் பெறவேண்டும். பெண்களுக்



குக் கற்பு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது தாய் நாட்டின் வீர சுதந்திரமும். எனவே, தன் மகா ராஜ்யத்தின் கற்பாகிய சுதந்திரத்தைப் பாதுகாத்து ஜனங்களுக்கு எப்போதும் நன்மை செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு வாழ்ந்து வந்தானும் தசரதன். இதற்காகவே தானும் அமைச்சர்களும் தருமமும் சேர்ந்து தோள் கொடுத்து ராஜ்ய பாரத்தைச் சுமந்ததாகச் சொல்லுகிறான் :

கன்னியர்க்(கு) அமைவருங்
கற்பின், மாநிலம்
தன்னை இத் தகைதரத்,
தருமம் கைதர,
மன்னுயிர்க்(கு) உறுவதே
செய்து வைகினேன் :
என்னுயிர்க்(கு) உறுவதும்
செய்ய எண்ணினேன்.

[அமைவரும் கற்பின் - அமைய வேண்டிய அருமையான கற்பி ேைடு. மாநிலம் - ஸாம்ராஜ்யம். தகை - தன்மை. மன்னுயிர் - குடி மக்கள். உறுவது - தேவையானது. வைகினேன் - வாழ்ந்தேன்.]

"நீண்ட காலம் எதிரிகளுக்கு இடங் கொடாமல் இந் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றி மக்களுக்கே பணி செய்து வந்த நான் இனி ராஜ்யக் கவலைகளை விட்டு என்னுயிர்க்கும் இதம் தேட விரும்புகிறேன்" என்று மந்திரி சபையில் தன் கருத்தை உருக்கமாக வெளியிடுகிறான்.

ராஜபோகமன்று; ராஜ்யபாரந்தான்.

'மன்னுயிர்க்கு உறுவதே செய்து வைகினேன்' என்று அரசின் அர்ப்பண வாழ்க்கையைக் குறிப்பிட்டவன், தன் அரசியல் கொள்கையை-தனது ராஜ வாழ்க்கையின் பெரு நோக்கத்தை - வெளியிடும் போது, 'ராஜ போக மன்று, ராஜ்ய பாரமே எனது லட்சியமாக இருந்தது' என்கிறான்!

விரும்பிய மூப்பெனும்
விடு கண்டயான்,
இரும்பியல் அனந்தனும்
இசைந்த யானையும்
பெரும்பெயர்க் கிரிகளும்
பெயரத் தாங்கிய
அரும்பொறை இனிச்சிறி(து)
ஆற்ற ஆற்றலேன்!

[இரும்பியல் - பெரிய பிடர்; (இங்கே) தலை. அனந்தன் - ஆதிசேஷன். பெயர்க் கிரிகள் - பெயர் பெற்ற குலகிரிகள். பெயர - (பாரம்) நீங்கியிருக்கும்படி. அரும் பொறை - பொறுத்தற்கு அரிய பாரம். ஆற்ற - சுமக்க. ஆற்றலேன் - இயலாதவன் ஆனேன்.]

பூமி அந்தரத்தில் இயங்குகிறது என்று சொல்லுகிறார்கள் விஞ்ஞானிகள் என்பதைப் பள்ளிப் பிள்ளைகளும் இந்நாளில் அறிவர். இப்படி நாம் வசிக்கும் பூமியை ஆதார மில்லாமல் அந்தரத்திலே தொங்க விட்டு விடுவது கவலையாகப் போய்விட்டது பௌராணிகர்களுக்கு. எனவே அவர்கள் ஆதிசேஷன் என்ற ஆயிரம் தலைப் பாம்பைக் கொண்டு கழுத்து முறிய நமது பூமியைச் சுமக்கச் செய்தார்கள். அப்போதும் கவலை தீர்ந்த பாடில்லை. அந்த அனந்தனுக்கு உதவியாக எட்டுத் திக்குகளிலும் திக்கஜங்கள் என்ற எட்டு யானைகளை நிறுத்தி வைத்தார்கள். அந்தப் பாம்பும் யானைகளும் களைத்து போனால் என்ன செய்வது?— என்ற கவலையுடன் குல கிரிகள் என்ற எட்டு மலைகளையும் முட்டுக் கொடுத்தார்கள். இவைகளெல்லாம் சேர்ந்து சுமக்கும் பூபாரத்தை அரசன் ஒருவனாகத் தாங்கி நிற்க முன் வருகிறானாம். 'பாம்பே! யானைகளே! மலைகளே' நீங்களெல்லாம் இந்தப் பாரத்தைத் தாங்கி அலுத்துப் போயிருக்கிறீர்கள். என் தோளில் வைத்துவிட்டுச் சிறிது இளைப்பாறுங்கள்!' என்கிறானாம்.

இப்படிப்பட்ட ராஜ்ய பாரத்தை இனித் தன் கிழத் தோள்களால் சிறிதும் தாங்க முடியாதென்று தசரதன் சொல்லுகிறான். தான் இனிமேல் சிங்காசனத்தில் இருந்தால் அது ராஜ்யபாரத்தைத் தாங்குவதற்காக அன்று, ராஜ போகத்தை அனுபவிப்பதற்கே ஆகும் என்று கருதுகிறான். பகைவர்களை யெல்லாம் வென்று நின்ற தான், கள்ளர்களைப்போல்

மறைந்து கிடக்கும் போக விருப்பம், காமம் முதலான உட் பகைவர் களுக்கு அஞ்சி வாழ்வது தகுதியா, தர்மமா?—ராஜ தர்மமா?

### இளையாள் நினைவு

இவ்விதமாகத் தசரதன் பேசிக்கொண்டிருக்கும்போதே, இளையா ளாகிய கைகேயியின் நினைவு வருகிறது. அவளுடைய இளமையும் கட் டழகும், அசுரர்களைத் தான் வென்றொழித்த காலத்திலும் அந்த வாழ்க் கைத் துணைவி தன் அழகிய தளிரடிகளால் ரதத் தட்டை மிதித்தேறிப் பதுமைபோல் மலர்க் கைகளில் சாட்டை பிடித்துச் சாரத்யம் செய்த அந்தத் திறமையும், இவன் மனக் கண் முன் ஓடி வருகின்றன. இத் தகைய காதலியின் உதவியால் பகைவர்களுக்குப் பின்னிடாது வெற்றி பெற்ற தனக்குக் காமம் முதலிய உட்பகைவர்களை ஜயிப்பதும் அருமை யாகுமோ என்று கேட்கிறான்:


பஞ்சிமென் தளிரடிப்
பாவை கோல்கொள,
வெஞ்சினத்(து) அவுணர்தேர்
பத்தும் வென்றுளேற்(கு)
எஞ்சலில் மனம்எனும்
இழுதை ஏவிய
அஞ்சுதேர் வெல்லும்அ(து)
அருமை ஆவதே?

[பஞ்சிமென் தளிரடி — செம்பஞ்சு ஊட்டிய மென்மையான தளிர போன்ற பாதங்கள். அவுணர் — அசுரர். எஞ்சலில் — குறைவற்ற. இழுதை- பேய். அஞ்சு தேர் - ஐம்புலன்க ளாகிய தேர்கள்.]

கைகேயி ஏவிய ஒரு தேரில் இருந்து கொண்டு அசுரர்களு டைய பத்துத் தேர்களையும் ஜயி த்த எனக்கு, மனம் என்ற பேய் ஏவுகிற ஐம்புலனுகிற ஐந்து தேர் களையும் வெல்லுவது அருமை யாகுமோ? — என்ற இந்தக் கேள்வியிலேயே அந்த இளையாள் மீது கிழச் சக்ரவர்த்திக்கு உள்ள மோகம் தொனிக்கிறது; இத ஞல் விளையப்போகும் அனர் த்த பரம்பரையும் முன்கூட்டியே மறைமுகமாய் உணர்த்தப்படு கிறது.

'பத்துத் தேர்' 'கைகேயி சாரத்யம்' 'அஞ்சு தேர்' என் றெல்லாம் சக்ரவர்த்தி பேசுகி ருன்: விதி சிரிக்கிறது பிடரியி லிருந்து கொண்டு!

# சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

## 108. வீட்டுக்கு மூன்று வாசல்

மந்திரி சபையில் சக்கரவர்த்தி பேசிக்கொண் டிருக்கும்போது, தன்னை வசீகரித்து வெறி கொள்ளச் செய்த வீரப் பெருமக்களின் சித்தாந்தம் இன்னதெனச் சுட்டிக் காட்டுகிறான். போரில் உயிரைக் கொடுப்பது வீரர்களுக்கு என்றுமே திருப்திதான், ஆசைதான். ஆனால் பகைவர்கள் எதிர்த்து வந்து போர் செய்யும்போது சொந்த நாட்டின் மானத்தையும் சுதந்திரத்தையும் — அதாவது, நாட்டின் கற்பு என்று தசரதன் சொல்லுகிறானே அதை — காக்கும் பொருட்டு உயிரைக் கொடுப்பதே சுத்தமான வீர தர்மம். இவர்கள் உயிரை இழக்கிறவர்களல்ல, சுதந்திர தேவியைப் பிராணப் பிரதிஷ்டை செய்து வைப்பவர்கள். இவர்களுக்கு மோக்ஷ லோகம் தன் முதலாவது வாசலைத் திறந்து வைத்திருக்கிறதாம். ஆம், இது தான் சுத்த வீரர்கள் பிரவேசிக்கும் உரிமை வாய்ந்த மோக்ஷ வாசல்.

### கூட்டோடு கைலாஸம்!

சரி; அப்படியானால் உயிரை விட்டுத்தான் விடுதலை பெற வேண்டுமா? உயிரை வைத்துக்கொண்டு மோக்ஷம் அல்லது விடுதலையை இந்தப் பிறவியிலேயே அடைய முடியாதா? ஞானத் தெளிவு பிறக்கும்போது மோக்ஷ லோகம் தன் இரண்டாவது வாசலைத் திறந்து வைக்கிறது, நன்றாகத் திறந்து வைக்கிறது. இது நல்லறிஞர்கள், மெய்யறிஞர்கள் உடம்போடு பிரவேசிக்கும் மோக்ஷ வாசல்.

மோக்ஷ லோகத்திற்கு மூன்றாவது வாசலும் உண்டு என்கிறான் தசரதன். இந்த மூன்றாவது வாசலைத் தியாக மூர்த்திகளுக்காகத் திறந்து தயாராக வைத்திருக்கிறதாம் மோக்ஷ லோகம். இவர்கள் இந்த வாசல் வழியாய்ப் பிரவேசித்துப் பேரின்பத்தை அனுபவிக்கிறார்களாம்.

இத்தகைய அருமையான வீர சித்தாந்தத்தை வெளியிடும் தசரதன் வாக்கு :

ஒட்டிய பகைஞர்வந்(து)
உருத்த போரிடைப்
பட்டவர் அல்லரேல்,
பரம ஞானம்போய்த்
தெட்டவர் அல்லரேல்,
செல்வம் ஈண்டெனா
விட்டவர் அல்லரேல்,
யாவர் வீடுளார்?

[ஒட்டிய — எதிர்த்து வந்த. உருத்த — சினந்து செய்த. தெட்டவர் — தெளிந்தவர். ஈண்டு - (இங்கே) இந்த உலகத்திற்கே. வீடு — மோக்ஷம்.]

வலுச் சண்டைக்குப் போய்க் களத்திலே மடிவதைச் சுத்த வீரம் என்றாவது, தரும வீரம் என்றாவது தசரதன் ஒப்புக்கொள்வதாகத் தெரியவில்லை. பகைவர்கள் வலுச் சண்டைக்கு வந்து ஒரு நாட்டின் கற்பைக் கெடுக்க முயலும்போது அந் நாட்டுக்கு உரியவர்கள் கற்பைக் காக்கும் ஸ்திரீகளைப்போல் வீரமரணம் அடைவதைத் தான் தசரதன் இங்கே பாராட்டுகிறான். 'ஒட்டிய பகைஞர்' என்று கூறியது கவனிக்கத் தக்கது.



சுத்த வீரர்களைப் போல் ஞான வீரர்களையும் தியாக வீரர்களையும் சக்ரவர்த்தி பெரிதும் போற்றுகிறான். 'செல்வம் இந்த உலகத்துக்கே உரியது' என்று கண்டு அநாயாசமாகச் செல்வங்களையெல்லாம் சரியான சந்தர்ப்பத்தில் துறக்கத்தெரிந்த வீரம் தான் துறவு என்றும், தியாகம் என்றும் போற்றப் படுகிறது.

வீரம், ஞானம், தியாகம் என்ற இம் மூன்று வாசல்கள் தான் மோக்ஷத்திற்கு உண்டு, நான்காவது வாசல் கிடை

யாது என்பது கடைசி அடியில் வரும் வினாவினால் வற்புறுத்தப்படுகிறது.

## ‘தனியரசாட்சி’

தசரதனுக்கு வீரமரணம் கிடைக்க வில்லை; ஞானத் தெளிவும் பிறக்க வில்லையாம். “இந்த இரண்டு பாக்கியங்களும் பெறாத நான் எனது அரசச் செல்வத்தைத் துறந்தாவது விடுதலை பெற ஆசைப்படுகிறேன்” என்கிறான். ஞானத் தெளிவும் துறவுடன் உறவு பூண்டு தியாகத்தின் பயனாகக் கிடைத்து விடும் என்றும் சொல்லுகிறான்.

எப்படியாவது ராஜ்யக் கவலைகளிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று கருதும் தசரதன் அந்தத் துறவுப் பெரு நிலையையும், அதில் தனக்குள்ள ஆசையையும்,

நனிவரும் பெரும்பகை
நவையில் நீங்கிய
தனியர சாட்சியில்
தாழும் உள்ளமே!

[நனி - மிகுதி. நவை - குற்றம். தனி - ஒப்பற்ற.]

என்று குறிப்பிடுகிறான். சித்த சாந்தி என்பது தன் அரசாட்சிக்கும் மேலான அரசாட்சி என்று தசரதன் கூறுகிறான்.

## உங்கள் மாட்சிதான்!

இந்த அரசாட்சிக்குத் துணை செய்த அமைச்சர்களை நோக்கி, “நீங்கள் அந்த அரசாட்சியையும் நான் அடைந்து அனுபவிக்க உதவி செய்ய வேண்டும்” என்று வேண்டுகிறான்:

உம்மையான் உடைமையின்,
உலகம் யாவையும்
செம்மையின் ஓம்பி, நல்
அறமும் செய்தனென்:
இம்மையின் உதவி, நல்
இசைந டாயநீர்,
அம்மையும் உதவுதற்(கு)
அமைய வேண்டுமால்.

[உடைமையின்-பெற்றெடுத்தலால். ஓம்பி-பாதுகாத்து. இம்மை-இவ்வுலகம். இசை-புகழ். நடாய- நடத்திய; உண்டாக்கிய. அம்மையும்-அவ்வுலகு தரும் அத் தனியரசையும்.]

“எனக்கு அறிவு போல விளங்குகிறவர்களே! நான் அரசாண்ட மாட்சியெல்லாம் உங்கள் மாட்சிதான்!” என்று பேச ஆரம்பித்த சக்ரவர்த்தி பேச்சினிடையிலும், ‘உம்மை யான் உடைமையின்’ என்று அவர்களுடைய பெருமையை வற்புறுத்திக் காரியசித்தி பெற விரும்புகிறான், அவர்களுடைய தயவினாலும் உதவியினாலும்.




நான் ஏறி வந்த யானை மண்டபத்தின் வாசலிலேதான் நிற்கிறது, அம்பாரியும் கழுத்துமாக. அதிலே கட்டியிருக்கும் சந்திரவட்டக் குடையையும், மயில்-தோகைக் குஞ்சங்களையும் ஒருதரம் பார்த்து விட்டு, "அந்த இனிய நிழலில் தான் வந்தேன். ஆனல் அது சாச்வதமா? மேலும், இத்தகைய போக மெல்லாம் நீண்ட நாள் உண்ட எச்சில்தானே!" என்கிறன்:

கச்சையங் கடகரிக்
    கழுத்தின் கண் ணுறப்
பிச்சமும் கவிகையும்
    பெய்யும் இன்னிழல்,
நிச்சயம் அன்(று)எனின்
    நெடிது நாளுண்ட
எச்சிலை நுகருவ(து)
    இன்பம் ஆதுமோ?

[கச்சை – யானைக் கழுத்திலே இடும் கயிறு. கட கரி – மதயானை போன்ற யானை. கழுத்தின் கண் ணுற – பிடர் மீது பொருந்த. பிச்சம் – விசிறி போல் உபயோகப்படும் மயிலிறகு.]

"இனி இந்த இன்பத்தை விட்டுப் பேரின்பத்தைச் சிந்திக்க வேண்டியது தான். அந்தப் பேரின்ப வீட்டுக்கு உரிய மூன்று வாசல்களில் துறவு என்ற மூன்ருவது வாசல் வழியாகவாவது நான் பிரவேசம் செய்து விட வேண்டியதுதான்" என்று பேசுகிறன் சக்கரவர்த்தி.

# சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

## 109. பெற்ற பெருமை

'பிள்ளை இல்லையே' என்று தசரதன் நீண்ட காலமாய்க் கவலைப் பட்டுக் கொண்டிருந்தான். ஆனால் இந்தக் கவலையிலும் ஒரு முக்கியமான பகுதி அரசியல் - கவலைதான் என்று கம்ப ராமாயணம் தெரிவிக்கிறது. "எனக்குப் பின் இந்த ராஜ்யத்தைக் காவல் செய்ய யாரிருக்கிறார்? சாதுக்களுக்கு யார் பணி செய்யப் போகிறார்?" என்ற தன் கவலைகளை வசிஷ்டரிடத்தும் கலைக்கோட்டு முனிவரிடத்தும் வெளியிட்டுப் பிள்ளை வரம் கேட்கிறான். ராமனைப் பெற்றெடுத்துத் தக்கோனாகக் கண்டதும், "நமக்குப் பின் ராஜ்யக் காவலுக்கு இதோ ராமன் இருக்கிறான். ஆகவே இனி எனக்கு ராஜ்யக் கவலை வேண்டாம்" என்ற எண்ணம் வந்து விடுகிறது.

### 'இனி அவன் வருந்த.....'

இந்த எண்ணத்தைத் தான் தசரதன் மந்திரி சபையிலே தன் பேச்சின் முடிவில் வெளியிடுகிறான்:

மைந்தரை இன்மையின்,
வரம்பில் காலமும்
நொந்தனன்; இராமன்என்
நோவை நீக்குவான்
வந்தனன்; இனிஅவன்
வருந்த யான்பிழைத்(து)
உய்ந்தனன் போவதோர்
உறுதி எண்ணினேன்.

[ உய்ந்தனன் போவது — கடைத்தேறிப் போவதாகிய. ]

தன் வருத்தத்தை நீக்கும் பொருட்டு வந்து பிறந்த ராமன் ராஜ்ய பாரத்தைச் சுமந்து வருந்த வேண்டும் என்கிறான். 'இனி அவன் வருந்த யான் பிழைத்து' என்ற பேச்சிலே ஹாஸ்யமும் எக்களிப்பும் தொனிக்கின்றன. அருமையும் தொனிக்கத்தான் செய்கிறது.

...... ...... இனி அவன்
வருந்த யான்பிழைத்(து)
உய்ந்தனன் போவதோர்
உறுதி எண்ணினேன்.


என்ற சொற்றொடரைக் கருத்தூன்றிப் பார்த்தால், ராமன் காடு சென்று வருந்தப் போவதும், தசரதன் அதனால் உடல் துறந்து போவது மாகிய ஓர் உறுதியையும் இச் சக்ரவர்த்தி எண்ணி விட்டானோ?—என்ற பொருள் கூடத் தொனிக்கிறது. பேச்சில் தன்னை யறியாமலே மேல் விளைவைக் குறிப்பிக்கும் சொற்றொடர் ஒன்று வந்து விழுவதைப் பலரும் அனுபவத்தில் கண்டிருக்கலாம். இந்த அனுபவத்தை இங்கே கவிஞன் காட்டி யிருப்பது இந்த இதிகாச கதியில் வாசகருள்ளத்தைப் பிணித்துக் கொண்டு போகும் ஓர் உபாயம் என்று கருதத் தக்கது.

இனி, வீர புருஷனாகிய தான் போர்க்களத்தில் வீர மரணம் அடைய வில்லையென்றும், செல்வத்தைத் துறந்தும் போகவில்லையே யென்றும் வருந்திக் கொண்டிருந்த தசரதன் அப்படிச் செய்யாததால் தன்னைக் குறித்து ஒரு பழிச்சொல் ஏற்படும் என்றுதானே நம்பியிருக்க வேண்டும்? ஆனால் சொந்த நிலையில் தனக்குப் பழி ஏற்படுவதைக் காட்டிலும் ராமன் தந்தை என்ற நிலையில் பழி ஏற்படுவது இன்னும் அதிக வருத்தத்திற்குக் காரணமாகிறதே என்கிறான்:

இறந்திலன் செருக்களத்(து)
இராமன் தாதைதான்

[செருக்களம் - போர்க்களம். தாதை - தந்தை.]
—என்றெல்லாம் வருந்துவதைக் கேளுங்கள்.

ராமனைப் பெற்றெடுத்து ராஜ்யத்துக்குப் பணி செய்யும் காவலனாகப் பயிற்சி செய்வித்த பின்பு, பிள்ளைக்குத் தக்க பெண்ணைத் தேடி மணஞ் செய்து வைக்க வேணுமே என்ற கவலையும் எல்லாத் தந்தைகளுக்கும் ஏற்படுவது போல் தசரதனுக்கும் ஏற்பட்டது. சீதா கல்யாண மகோத்ஸவத்தைக் கண்டு களித்த கண்கள் இப்



போது சீதா ராமர்களின் பட்டாபிஷேக மகோத்ஸவத்தையும் கண்டு களிக்க ஆசைப்படுகின்றன:

பெருமகன் என்வயின்
பிறக்கச், சீதையாம்
திருமகள் மணவினை
தெரியக் கண்டயான்,
அருமகள் நிறைகுணத்(து)
அவனி மாதெனும்
ஒருமகள் மணமும்கண்(டு)
உவப்ப தாயினேன்.

[என் வயின் - என்னிடத்தில். அருமகள் - அருமையான பெண். அவனிமாது - பூமிதேவி.]

ராஜ்ய பரிபாலனத்துக் குரிய முடிசூட்டு வைபவத்தையும் பூமிதேவியின் கல்யாண மென்று உத்ஸாகமாய்ப் பேசுகிறான் தசரதன். இப்படித் தன் கருத்தை வெளியிட்டு, "ஆதலால் மந்திரிகளே! உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டுத் தன் பேச்சை முடித்துக் கொள்கிறான்:

ஆதலால் இராமனுக்கு
அரசை நல்கிஇப்
பேதைமைத் தாய்வரும்
பிறப்பை நீக்குவான்,
மாதவம் தொடங்கிய,
வனத்தை நண்ணுவேன்;
யாதுநும் கருத்தென
இனைய கூறினன்.

[நல்கி — கொடுத்து. பேதைமைத்தாய் — பேதைமையின் பலனாக. நீக்குவான் — நீக்குவதற்கு. இனைய — இவைகளை.]

## களிப்பும் கவலையும்

இந்தப் பேச்சைக் கேட்டதும் மந்திரிகளுக்குச் சந்தோஷம் கரைபுரண்டு பொங்குகிறது. ஆனால் இந்த மகிழ்ச்சி சிறிதும் நீடித்திருக்கவில்லை. உடனேயே துயரமும் தோன்றி விடுகிறது. காரணம் என்ன, இத்தகைய உணர்ச்சி - முரணுக்கு?

திரண்ட தோளினன்
இப்படிச் செப்பலும்;
சிந்தை
புரண்டு மீதிடப்
பொங்கிய உவகையர்,
ஆங்கே
வெருண்டு மன்னவன்
பிரிவெனும் விம்முறு
நிலையார்;
இரண்டு கன்றினுக்(கு)
இரங்குமோர் ஆவென
இருந்தார்.

[மீதிட - மேலிட. விம்முறு — துயரப்படுவதற்கு உரிய.]

இரட்டைக் கன்றுகளையுடைய ஒரு பசு. கன்றுக்குப் பால் கொடுக்கும்போதே இரண்டாவது கன்றையும் மறந்து விட மனமில்லா

மல் இருக்கிறதாம். இத்தகைய ஒரு பசுவின் நிலையை அடைந்தார்களாம் மந்திரிமார். ராம பட்டாபிஷேகத்தைக் குறித்து மகிழ்ச்சி பொங்கிய உள்ளத்திலே 'தசரதன் நம்மைப் பிரிந்து விடுவானோ?' என்ற பயமும் இடம் பெறுகிறது. எனவே மகிழ்ச்சி வருத்தமாக மாறுகிறது. எனினும் அவர்கள் சக்ரவர்த்தியின் கருத்துக்கு இணங்கிய கருத்துடன் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருக்கிறார்கள்.

மந்திரிகளுடைய கருத்தையும் தசரதனுடைய கருத்தையும், அவர்களுடைய மௌனத்தாலும் இவனுடைய பேச்சாலும் உணர்ந்து கொண்ட வசிஷ்டர் தம் கருத்தைத் தெரிவிக்கத் தொடங்குகிறார். தொடக்கத்திலேயே தசரதன் பெற்ற — வேறு யாரும் பெறாத— பெருமையை வற்புறுத்துகிறார்:

நிருப! நின்குல
மன்னவர் நேமிபண்(டு)
உருட்டிப்
பெருமை எய்தினர்:
யாவரே இராமனைப்
பெற்றார்?

[நிருப - சக்ரவர்த்தியே. நேமி - ஆக்ஞா சக்ரம். பண்டு - பூர்வத்தில்.] என்று வசிஷ்டர் சக்ரவர்த்தியை நோக்கிக் கேட்கிறார்.

"அரசே! உனக்குமுன் இருந்த சக்ரவர்த்திகளும் ராஜ்ய பரிபாலனத்திலும் நீதிபரிபாலனத்திலும் வீர பராக்கிரமங்களிலும், வண்மை அறப் பற்று முதலிய அரும் பெருங்குணப் பெருமைகளிலும் உனக்கு ஒரு சிறிதும் குறைந்தவரல்லர். ஆனால், ராமனைப் பெற்ற பேறு மாத்திரம் அவர்களுக்கு இல்லை!" என்று பேசத் தொடங்குகிறார் வசிஷ்ட முனிவர். ஆம், ராமனைப் பெற்ற பெருமை தசரதனின் தனிப் பெருமை யல்லவா?


## அவன் வழி வேறு!

எஸ். ஆர். வி.

சைனா பஜாரில், ஒரு கிழவரின் கையிலிருந்து தவறி விழுந்த மணிபர்ஸைச் சட்டென்று குனிந்து எடுத்த மாணிக்கம் அதை அவரிடமே கொடுக்கப் போனபோது அவனுடைய கூட்டாளி வீரப்பன் "அடே முட்டாள்! நீ திருட்டுத் தொழிலுக்கே லாயக்கில்லேடா! தூ!" என்றான். அதற்கு மாணிக்கம் "கிழவன் சட்டைப் பையில் நிறைய நோட்டுகள் இருக்கு! இந்தப் பர்ஸைக் கொண்டு போய்க் கொடுத்து, அவனுடைய நன்மதிப்பைச் சம்பாதித்துக் கொண்டால், பிறகு, சட்டையிலிருக்கும் அத்தனை பணத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு வந்து விடலாம்! உன்னைப் போல் அல்பத்துக்கு ஆசைப்பட்டு அத்துடன் திருப்தியடைபவன் அல்ல நான்!...என் வழியே வேறு!" என்று பதிலளித்துவிட்டுக் கிழவரிடம் ஓடிச் சென்று, பர்ஸைக் கொடுத்தான்.

கிழவருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. "நீ நன்னா இருக்கணும், அப்பா!...எந்தத் திருடன் கையிலாவது இது அகப்படாமல் இருந்ததே!" என்று கூறி விட்டு மேலே நடந்தார். மாணிக்கமும், "ஸார்! பையிலே நிறையப் பணத்தை வச்சிண்டு போகப்படாது நீங்க! இருட்டு வேளை ... திருடன்கள் ஜாஸ்தி இங்கே... எங்கிட்டே கொடுங்கோ! ஜாக்கிரதையா எடுத்துண்டு வரேன்!" என்று கூறி, மேலும் திருட்டுக் கொடுத்தவர்கள் பலரின் விருத்தாந்தங்களைச் சொல்லிக் கொண்டு கூடவே நடந்தான். கடைசியில் கிழவர் "சரி" என்று சொல்லவும் மாணிக்கம் கையை நீட்டினான். கிழவர் ஆச்சரியத்துடன் "என்ன வேணும் ஆசீர்வாதம் தானே?... பேஷா ஆசீர்வாதம் பண்றேன்! நீ தங்கமான பிள்ளை. இவ்வளவு தூரம் துணைக்கு வந்தே!" என்று கூறி, அந்த வழியே வந்த பஸ்ஸில் ஏறிக் கொண்டார்.

கிழவர் ராமச்செவிடு என்பது அப்பொழுதுதான் தெரிந்தது மாணிக்கத்திற்கு!



# சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

## 110. வசிஷ்டர் பேச்சு

“அண்ணலே! இனி நீ அருந்தவம் இயற்றுவது தகும். ராஜ்யத்தைக் குறித்த கவலை உனக்கு இனி வேண்டியதில்லை” என்று பேசும் வசிஷ்டர்,

வண்ண மேகலை நிலமகள்
மற்றுனைப் பிரிந்து.
கண்இ ழந்திலள் எனச்செயு(ம்)
நீதந்த கழலோன்

[வண்ணம்-அழகு. கழலோன்-வீரக் கழலை அணிந்தவன், ராமன்.]

என்று உறுதி கூறுகிறார். 'அந்தக் கவலையைத் தீர்க்கத்தான் உன் மகன் ராமன் இருக்கிறானே' என்கிறார்.

### கண்ணான அரசியல்

நிலமகளும் ஓர் அழகிய மேகலாபரணம் அணிந்திருக்கிறாளாம். நீல ரத்தின கசிதமான ஆபரணம். ஆம், நீலக் கடல்தான் அது. இந்த நிலமகளுக்கு அரசாங்கம் கண் போன்றது. ஆகவே, “என்னைப் பிரிந்து இந் நிலமகள் என்ன ஆவாளோ? குருடியாகத்தான் போய் விடுவாளோ?” என்றெல்லாம் தசரதன் கலங்கக் கூடும். ஆனால், கண்ணொளியிழப்பதற்குப் பதில் இனி நிலமகளின் கண்ணொளியும் அழகும் அதிகரிக்கும் என்றே சொல்லுகிறார் வசிஷ்டர். ராமன் உலகத்துக்குக் கண்ணாக அமைந்து அரசியலை நடத்துவான் என்பது குறிப்பு. “உன்னினும் உன் மகன் நல்லரசு புரிவான்; வீர மன்னனாகப் பணிபுரிவான்” என்ற கருத்தை வசிஷ்டர் வசீகரமாக வெளியிடுகிறார்.

### தர்மமூர்த்தி யார்?

மேலும் பேசுகிறார்: “தர்ம மூர்த்தியே வந்து அவதரித்தான் என்று சொல்லும்படி விளங்குகிறான் ராமன். இந்த நிலையில் அவன்

ராஜ்ய பாரத்தைச் சரியானபடி தாங்குவானா என்பது போன்ற வினாக்களுக்கு இடமே இல்லை.''-இப்படிப் பேசிவரும் வசிஷ்டர் தர்ம மூர்த்தியின் லக்ஷணத்தையும் தெளிவாக்குகிறார்:

புறத்து நாம்ஒரு
பொருள்இனிப் புகல்கின்ற(து)
எவனோ,
அறத்தின் மூர்த்திவந்(து)
அவதரித் தான்என்ப(து)
அல்லால்?
பிறத்தி யாவையும்
காத்(து)அவை பின்உறத்
துடைக்கும்
திறத்து மூவரும்
திருத்திய திருத்தும்அத்
திறலோன்.

[எவனோ - யாதோ. பிறத்தி - பிறப்பித்து.]

மும்மூர்த்திகளும் உலகத்தைப் பிறப்பித்து, காத்து, அழிக்கும் முத்தொழிலையும் செய்து வருகிறார்களல்லவா? 'உலகம் திருந்த வேண்டும்' என்ற நோக்கத்துடன் தான் அத் தெய்வ மேதாவிகள் தங்கள் முத்தொழில்களையும் செய்து வருகிறார்களாம். பிரம்மா படைக்கிறான்; விஷ்ணு காப்பாற்றுகிறான்; சிவன் அழிக்கிறான், — மேலும் மேலும் சிருஷ்டி திருந்தவேண்டுமென்பதற்காகவே. பிரம்மா முன்னிலும் தெளிவாய்ப் படைத்துப் பார்க்கிறான்; விஷ்ணு முன்னிலும் நன்றாக ரக்ஷித்துப் பார்க்கிறான். சிவபெருமான் துடைக்கத் துடைக்க மேலும் மேலும் சீர்திருத்தங்களுக்கு வசதி ஏற்படுகிறது.

இப்படியெல்லாம் மும்மூர்த்திகளும் திருத்த முயன்று கொண்டிருக்கும் இவ்வுலகை அறத்தின் மூர்த்தியாகிய வீரனே நன்றாக — புரட்சிகரமாக — திருத்த முடியும் என்பது வசிஷ்டர் கருத்து. மும்மூர்த்திகளின் செயலையும் அப்படித் திருத்தத் துணிகிறவனே தர்ம வீரன். அத்தகைய தர்ம மூர்த்தியாக ராமன் விளங்கப்போகிறான் என்கிறார் முனிவர்.



## வசிகரத்தின் ரகஸ்யம்

இத்தகைய ராமனைச் செல்வம் என்ற ஸ்ரீதேவியும் ராஜ்யம் என்ற பூதேவியும் தங்களுக்கு இன்னுயிர்த் துணையாக நினைத்து நேசிக்கிறார்களாம். அதாவது ஜனங்களுக்கெல்லாம் ராமன் என்றால் ஒரே பிராணன். காரணம் என்ன? ராமனும் அவர்களை அப்படி நேசிக்கிறானாம். எப்படி?

தன்னுயிரைப்போல் மன்னுயிரை நேசிப்பதென்று சொல்வதுண்டு. "ஆனால், ராமன்தான் தன்னுயிரை நேசிப்பதில்லையே! தன்னைப் பெற்றெடுத்த தந்தையாகிய உன்னை நேசிக்கிறான். ஆகவே, ராமன் விஷயத்தில் தன்னுயிரைப் போல் மன்னுயிரை நேசிக்கிறான் என்று சொல்வது தகுதியற்றது. உன்னை நேசிப்பது போல் மன்னுயிரை நேசிக்கிறான் என்றுதான் சொல்ல வேண்டும்" என்கிறார் முனிவர். அதாவது, ராமன் குடிகளைத் தந்தையாகவே மதித்து மரியாதை செய்கிறானாம்.

## புதிய கொள்கை

'அரசனே குடிகளுக்குப் பிதா' என்ற பழைய அரசியல் கொள்கையைக் கம்பன் வசிஷ்டர் வாயிலாக மாற்றிக் குடிகளையே அரசாங்கம் தந்தையாகக் கருத வேண்டும் என்ற புதுமைக் கொள்கையை எப்படி வற்புறுத்துகிறான் பாருங்கள்:



பொன்உயிர்த்தபூ
மடந்தையும்
புவியெனும்
திருவும்,
இன்உயிர்த்துணை
இவனென நினைக்
கின்ற
இராமன்,
தன்உயிர்க்கென்கை
புல்லிது, தற்பயந்(து)
எடுத்த
உன்உயிர்க்கென
நல்லன், மன்
னுயிர்க்கெலாம்,
உரவோய்!

[உரவோய் - அறிவின் திட்பமுடையவனே. பொன் உயிர்த்த - பொன்னையும் அழகையும் பெற்ற. பூமடந்தை - ஸ்ரீதேவியாகிய லக்ஷ்மி. புவிஎனும் திரு - பூமிதேவியாகிய செல்வி. என்கை — என்று சொல்வது. புல்லிது - தகுதியற்றது. தற்பயந்து - தன்னைப் பெற்று.]

## வாழ்க்கைத் துணை

இப்படி ராமன் பெருமையை வற்புறுத்திய வசிஷ்டர் முடிவில் ராமனது வாழ்க்கையை உருவாக்கி வரும் சீதையையும் வாயார மனமாரப் புகழ்கிறார்:

மண்ணினும் நல்லள்;
மலர்மகள், கலைமகள்,
கலையூர்
பெண்ணினும் நல்லள்;
பெரும்புகழ்ச் சனகி: பேர்
உலகின்
கண்ணினும் நல்லன்:
கற்றவர் கற்றிலா
தவரும்
உண்ணும் நீரினும்,
உயிரினும் அவனையே
உவப்பார்!

[ மண் - பூமிதேவி. மலர்மகள் - லக்ஷ்மி. கலையூர் பெண் - மான் வாகனமுடைய உமாதேவி. ]

சீதை பொறுமையில் பூமிதேவியையும் வென்று விடுகிறாள். அழகில் திருமகளையும், அறிவில் கலைமகளையும் வென்று விடுகிறாளாம். சதி அல்லது வாழ்க்கைத் துணை என்ற தன்மையில் உமாதேவியையும் வென்று விடுகிறாளாம். இத்தகைய சீதையை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட ராமன் உலகத்திற்குக் கண்ணினும் நல்லவனாக இருப்பதில் என்ன அதிசயமிருக்க முடியும்?

கற்றாரும் மற்றாரும் ஒருங்கே அவனை நேசிப்பதிலும் தான் அதிசயம் இருக்க முடியுமா? ஜனங்கள் உண்ணும் நீரைக் காட்டிலும் உயிரைக் காட்டிலுமே ராமனை உவக்கின்றார்களாம்.

சீதையின் அழகைக் குறிப்பிடும்போது திருமகளை வென்றவள் என்று சொல்கிறவர், அறிவிலும் குணங்களிலும் கலைமகளினும் நிலமகளினும் மலைமகளாகிய உமாதேவியினும் சிறந்தவள் என்று கூறுவது கவனிக்கத் தக்கது. சீதையின் குண சௌந்தரியம் ரூபசௌந்தரியத்தைக் காட்டிலும் மும்மடங்கு பொலிகின்றது என்பது குறிப்பு.

“இவளை மனைவியாகக் கொண்ட பாக்கியசாலியான சீதா ராமனைக் காட்டிலும் மன்னுயிர்க்குச் சிறந்தவர் இல்லை. ஆகவே உனக்கும் தவத்தைக் காட்டிலும் சிறந்தது ஒன்றும் இல்லை” என்று சொல்லி முடிக்கிறார் வசிஷ்டர்.

இந்தப் பேச்சைக் கேட்டதும் தசரதனின் மகிழ்ச்சியை என்னென்பது? கம்பன்தான் அதையும் சொல்ல வேண்டும்.